

## இந்த இதழில்..

**நம்பிக்கை மீதான..**
- தமயந்தி
**ஒரு கிராமத்தின் கதை.**
மு. நித்தியானந்தன்.
**ஆடைகள் வாங்குவதற்காக..**
- பிரபாமணாளன்.
**அன்புள்ள நண்பனுக்கு..**
- புவனன்.
**ஒரு காயமுற்ற தேசப்பற்று...**
தமிழில்: சித்தார்த்தன்
**கறுத்தானின் பக்கம்**
- கறுத்தான்
**நீ நலமா ?**
- றிஸ்வியூ முகமத் நபீல்
**சோறு போடும் பீங்கானில்..**
- சோலைக்கிளி
**நிகழ்வுகளில்..**
- சிவரமணி
**ஜேர்மனி - இலக்கியச்சந்திப்பு**
**தமிழ் அகராதி**
- து. குலசிங்கம்.
**பிரெஞ்சுக்காரருக்கு தமிழ்..**
- ஆர். தேவகுமார்.
**வசந்தகால இலையுதிர்வு**
- வாசுதேவன்
**மாண்பு மிகு நாய்**
- சோலைக்கிளி
**பனங்கொட்டைகள்**
கி. பி. அரவிந்தன்
**உலகமெல்லாம் வியாபாரிகள்**
- சி. சிவசேகரம்
**வேலிக்குள் வாழ்கிறோம்**
- அ. குமரன்
**திருவிழா**
- அ. சந்திரகாசன்
**என்னவென்று உரைப்போம்.**
- தாத்தா

**கணனி பதிப்பு** : மாதவன்.
**வடிவமைப்பு** : புவனன்
**அட்டைப்படம்** :
**நன்றி** : LIBERATION

# ஓசை

காலாண்டிதழ்

1992
ஐப்பசி

ஓசை - 3
ஒலி - 2


இதழ் 10

ஆசிரியர் குழு

தொடர்களுக்கு :
'OOSAI'
C. L. A. L. P
B. P : 701 - 09
75425 PARIS CEDEX.
FRANCE.

நீ
சொல்லுகின்ற
கருத்தை
நான்
முற்றிலுமாக
மறுக்கிறேன்.
ஆனால்
அதைச்சொல்லுவதற்கு
உனக்கு
பூரண உரிமையுண்டு
என்பதை நிரூபணம் செய்ய
நான் மரணத்தைத்தழுவவும்
தயார்.

பிரெஞ்சுத்தத்துவஞானி
வோல்த்தேயர்.



' ஒவ்வோரு மனிதனும் சுதந்திரத்துடனும், பாதுகாப்புடனும் வாழுவதற்கு உரித்துடையவன் '
நன்றி : UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS.

என்னுடைய கருத்து
என்னைப் பொறுத்தவரைக்கும் மட்டிலும்தான்
நூற்றுக்கு நூறு சரியானது. உண்மையானது.
பொதுப்பார்வைக்கு - அது
சரியானதாகவோ
அல்லது சரியாக இருக்கமுடியும் என்பதோ அல்ல
முழுக்க முழுக்க பிழையாகவும் இருக்கலாம்
எனவே,
பிறர் கருத்தை மதிப்பதும் - அவை
சரியெனப் படும் பட்சத்தில்
ஜீரணித்து ஏற்றுக்கொள்வதும்
எனது கடமை.
தவறின்
நானும் ஓர் துரோகி !
- ஓசை -

## தமயந்தி
## கவிதைகள்

இரையுங்கடலின் அலையுங்கரையும்
கரையி லீரக் கரும்பாறைகளும்
பாறைகாக்கும் ஒற்றைக் கொக்கும்
கொக்கின் பிடியிற் தப்பும் மீனும்
மீன்கள் நிரப்பி அசையும் படகும்
படகிற்கேட்கும் அம்பாக்குரலும்
குரலும் வானை உரசும் கூத்தும்
கூத்து முடிந்த கொட்டகைத்தரையும்
கொட்டகைத்தரையில் உதிர்ந்த மணியும்
மணிகள் தேடும் சிறுவர் படையும்
படையாய்த்திரளும் முள்ளிக்கொடியும்
கொடியிலுலருஞ் சிறகு வலையும்
வலையிற்சரியுஞ் சுங்கன் கிளையும்
கிளை முள் சிலிர்த்த கிழாச்சி மரமும்
கிழாச்சி மரமும் கண்ணாத்தீவும்
தீவுகள் சூழ்ந்த எந்தன் கரையும்
கரையிலோலைக் குடிசைநிரையும்
நிரையாய்ச்சடைத்த ஈச்சை மரமும்
ஈச்சை மரத்தில் பழுத்த குலையும்
குலைகள் தொங்கும் தென்னங்காடும்
காட்டில் மணக்கும் நொச்சிப்பூவும்
பூக்கள் சிரிக்கும் முசுட்டைக்கொடியும்
கொடிகள் படர்ந்த கள்ளிமரமும்
மரங்கள் நட்ட பாட்டன் நினைவும்
பாட்டன் நினைவாய்ப் பருத்த புளியும்
பருத்தபுளியின் பரம்பரைக்கதையும்
கதைகள் சொன்ன ஆச்சி முகமும்
முகத்திலுப்பு படிந்த சனமும்
சனங்கள் வளர்த்த நெய்தற் கலையும்
கலைகள் திரிந்த நரையான் தீவும்
நரையான் தீவின் வீழி ஒதுக்கும்

வீழி ஒதுக்கின் வெள்ளைமணலும்
மணலை அரிக்குங்கிழக்குக்கடலும்
கிழக்குக்கடலில் உதிக்கும் பொழுதும்
பொழுது புதையும் மேற்குப்பனையும்
பனையின் தலையில் நுங்குக்குலையும்
குலைகளிறக்கும் இருட்டுக்கதையும்
இன்னும் இன்னும்...
என்னைப்பிரிந்த எனதுதேச
வனப்பும், வனப்பின் எழிலுஞ்சிறப்பும்
காதல்கொண்ட கடலுங்கரையும்
எல்லாம் எனக்கு மீள வேண்டும்.
பார்க்க ரசிக்க, பேச, எழுத
சுதந்திர மனுவாய் இவற்றைச்செய்ய
மீண்டும் எனக்கு வேண்டும் இவைகள்
யாரிடம் சென்று விண்ணப்பம் செய்வேன் !
பனிமலைச் சுவரில் பட்டியல் எழுதி
பனிமுகிலிடமா முறையிட்டழுவேன் ?

## நம்பிக்கை மீதான நம்பிக்கையில்..

இடைவிடாத பயணம்.
இன்றுவரை வெட்டவெளியில்.
அடிவானின் கீழ்
அமிழ்ந்திக்கிடக்கும்
எனது கிராமம்
இன்னும்
மேலெழவில்லை
நம்பிக்கையும் தேயவில்லை
களைத்துப்போன கால்களுக்கு
ஆறுதல் கூறி
பயணம் தொடர்கிறது.

விழிகள் கூர்மையடையும்
வெளிகளுக்கப்பால்,
எங்கேயாவது
ஓர்
பனையின் தலைதானும்
புலப்படாதா என்று.

இதுவரை இல்லை.

இருட்டுக்கூடையுள்
பாம்பெனப் பூமி.
மகுடி வாசித்த
பொழுதும் போனது.


பயம்
கவ்விக்கொள்ள முயற்சித்து
பின் தொடரும்.
விரட்டியபடி இன்று வரை.
நம்பிக்கை; நம்பிக்கை;
நம்பிக்கை மீது நம்பிக்கை வைத்து
நடை நீட்டி
பயணம் விரிகிறது.

எனது கிராமம்
எனது கிராமத்தில்,
தோட்ட விரிப்பில்,
தென்னங்கால்கள் புதைந்த
தெளிந்த மணல் மேனியில்
எனது கால்கள்
தரிப்புக்காணும் வரை
பயணம் நீளும்.
நம்பிக்கைமீது கொண்ட
நம்பிக்கையோடு..

தமயந்தி

பிரான்ஸ்

# ஒரு கிராமத்தின் கதை



முு . நித்தியானந்தன்

பாரிஸில் எரித்தவெய்யிலின் உக்ரம் இல்லை தான்.
சுமாரான வெய்யில்.
இப்படி ஒரு பகல் பொழுதில்தான் அந்தக்கிராமம் செத்துப்போனது.
கிராமத்தின் வாயிலில் இரண்டாள் உயரத்தில் சிலுவை. சிதறலாய்ப்பயணி கள்.
ஜெர்மன் நாஜிகளால் படுகொலைசெய்யப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டு மரணித்துப்போன அந்தக்கிராமம் இன்று காட்சிக்கூடமாக மாறியிருக்கின்றது.

மெத்ரோக்களில் சகபயணிகள் பற்றித்துளியும் அக்கறையில்லாமல் உச்சஸ்தாயியில் செந்தமிழ் பேசிப்பழக்கப்பட்ட எங்களின் சிம்மக்குரல்கள் கூட தாமாகவே அடங்கிவிட்டன.
கிராமத்தின் உள்ளே நுழைகிறோம்.
எடுத்தஎடுப்பில் சாலையின் இடதுபுறத்தின் மேலே எரியுண்ட கிறிஸ்தவத் தேவாலயம் கண்ணில் படுகிறது . வலதுபுறத்தே சற்றுச்சரிவாகச்சிதறிக்கிடக்கும் வீடுகள், கடைகள் எல்லாம் சிதைவுகளாய்!

கிராமத்தின் சந்திக்கு வருகிறோம்.
டிராம் வண்டிகள் ஓடிய தண்டவாளத் தடயங்கள். நல்ல அகலமான சந்தி. ஒருகாலத்தில் இந்தச்சந்தி எவ்வளவு பரபரப்பாய் இருந்திருக்கும்!
சந்தியின் எல்லாமருங்கிலும் மதுச்சாலைகளும், கபே பார்களும் .....
சிதைவுகளை உற்று நோக்குகிறோம்.
எரிந்த நிலையில் தையல் மெசின்கள், இரும்புத்துண்டங்கள், இரும்பு நாற்காலிச்சட்டங்கள். எரிந்த வீடுகள், கடைகள் யார் யாருடையவை என்றுகூறும் - பித்தளைப்பெயர்ப்பலகைகள். மாவாலைகள், சலூன்கள் , மருத்துவமனைகள் , சிறுவர் பள்ளி, தபால்நிலையம் , கராஜகள் என்று எல்லாம், எல்லாமே எரிந்துபோய்...... ஒருகாலத்தில் செழித்து மதாளித்துக்கிடந்த அந்தக்கிராமத்தில் இப்போது ஈ, காக்கைகள்கூட இல்லை. ஓசைகளேஇல்லை. மயானபூமியில் நடக்கும் உணர்வு.

அப்போது நேரம் இரண்டு மணி.
இப்படி ஒருபகல் இரண்டு மணிக்குத்தான் அந்தக்கிராமம் செத்துப் போனது.

1944 ஜீன்10ந் திகதி Oradour -sur -glane பாரிசுக்குத் தென்மேற்காக 370கி. மீ. - தொலைவில் Limoges என்ற நகரிற்கு அருகே உள்ள சின்னக்கிராமம்.
மத்தியான ஆசுவாசத்தில் தோய்ந்துபோய்க்கிடக்கிறது அந்தக்கிராமம்.
சாப்பாட்டிற்கு வந்த பிள்ளைகள் பள்ளிக்குத் திரும்பிப்போய்விட்டன.
தெருக்களில் யாருமில்லை.
கணநேரம்தான்.
புழுதியைக்கிளப்பிக்கொண்டு வந்த கவச வாகனங்கள் வீதியை அடைத்துக் கொண்டு நிற்கின்றன.
ஒன்று, இரணடு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ........ தொடர்ந்து லாரிகள் .
திறந்திருந்த ஜன்னலூடாக பார்வையை வீசிய ஒருவர் சொன்னார். "பாருங்கள் ஜேர்மனியர்கள் "
தெருக்களின் பல முனைகளிலும் குவிந்து நிற்கும் ஜேர்மனியர்கள். சீருடைகள், கெல்மெட், பூட்ஸ் சப்பாத்துக்கள் , கரந்துறை யூனிபாரங்கள்.
என்னதான் நடக்கிறது? தெரியவில்லை.

அந்தக்கிராமம் முழுவதும் "சீல்" இடப்பட்டுவிட்டது.
கிராமத்தின் முரசு ஒலிக்கின்றது.
அந்தக்கிராமத்தின் மத்திய பசும் மைதானத்தை நோக்கி மக்களை வந்துசேரக் கோரும் அடையாள முரசொலி.
"விரைவாய்!" "SCHNELL"
கிராமமக்கள் எல்லோரும் மைதானத்தில் குவிகின்றனர்.
அடையாள அட்டை பற்றியசோதனைதான் என்று யாரோ சொல்லிக்கொண்டார்கள்.

கடுகடுத்த முகத்துடன் மைதானத்தில் இறங்கிய ஜேர்மனியவீரர்கள் பெண்களையும் குழந்தைகளையும் தனியாகவும், ஆண்களைத்தனையாகவும் பிரித்தனர்.
குவிந்திருந்த அந்தக்கிராமமக்களின் மத்தியில் மெல்லச் சந்தேகமும், பயமும் தலைதூக்க ஆரம்பித்தது.
"எங்களை என்ன செய்யப்போகிறார்கள்?"
தேவாலயத்தைநோக்கிச்செல்லுமாறு பணிக்கப்பட்ட பெண்களிற் சிலர் திருப்திப்பட்டுக்கொண்டார்கள். இறைவனின் சந்நிதானத்தில் -உலகின்

பாவங்களுக்காக தன்னைச் சிலுவையில் அறைந்துகொண்ட யேசுவின் தேவாலயத்தில் எங்களுக்கு என்ன தீங்கு இழைக்கப்பட்டுவிட முடியும்?

மூன்று பாரிய மாவாலைகள், இரண்டு கராஜீகள், ஒரு வைன் கிட்டங்கி, ஒரு ஷெட் என்று நிர்ணயிக்கப்பட்ட இடங்களை நோக்கி ஆண்கள் பல பிரிவுகளாகச் செல்லுமாறு பணிக்கப்பட்டனர்.

கிறிஸ்தவ தேவாலயத்துள் அடைக்கப்பட்ட பெண்கள் சில கணங்களில் தங்களுக்கயலில் தானியங்கித்துப்பாக்கிகளின் வெடியோசைகள் கேட்டுத்திகைத்துப்போகிறார்கள். அவர்கள் தங்கள் ஆண்களைச் சுட்டுக்கொல்கிறார்கள் என்று ஊகித்துக்கொள்ள அப்பெண்களுக்கு அதிகநேரம் எடுத்திருக்கமாட்டாது.

அவர்கள் ஊகித்தும் பார்த்திராத குரூரம் கோரத்தனமாடிக்கொண்டிருக்கிறது. வரிசை வரிசையாக நின்ற அந்த பிரெஞ்சுக்கிராமிய மக்கள் மீது இயந்திரத்துப்பாக்கிகள் சடசடக்கின்றன. ஒருவர் பின் ஒருவராய் அவர்கள் செத்துமாள்கின்றனர். இரத்தவெள்ளம். போதாததிற்கு அந்த நாஜி மிருகங்கள் கொழுத்திய தீ ஜீவாலைகளின் வியாபகம்.

முதல் சுட ஆரம்பித்ததுமே செத்ததுபோலத் தரையில் வீழ்ந்துவிட்ட ஒரு ஐந்துபேர் மட்டும் பிணக்குவியல்களில் இருந்து மெதுமெதுவாய் நகர்ந்து, தீ ஜீவாலைகள் பரவ ஆரம்பித்ததும் அந்த மாவாலை யின் மூலைகளுக்குள் ஒதுங்கி மிகுந்த அவதானத்துடன் தரையில் ஊர்ந்து , அயலில் உள்ள வெளிகளில் இறங்கி சென்றிக்குநின்ற ஜேர்மனியவீரர்கள் அகலும்வரை ஒளித்திருந்து பின்னிரவில் தப்பிவெளியேறமுடிந்தது.


அதேநேரம் தேவாலயத்துக்குள் அடைக்கப்பட்ட பெண்களைத்திகில் கவ்வியது. சில கணங்களில் அந்ததேவாலயம் சிறைக்கூடமாக்கப்பட்டுவிட்டது. அப்போது திடீரென்று தேவாலய வாயில் திறபடுகின்றது.

அப்பாடா, அவர்களை விடுவிக்கப்போகிறரர்களா?

உள்ளே நுழைந்த இரண்டு ஜேர்மன்வீரர்கள் தங்களுக்குப்பின்னாலிருந்த கதவுகளை அடைத்துவிட்டு பலிபீடத்தை நோக்கி நகர்கிறார்கள். பலிபீடத்துக் கருகில் ஒரு பெரிய பெட்டியைவைத்து வயர்களால் பிணைக்கிறார்கள். பின் சடுதியாக அதைப்பற்றவைத்துவிட்டு வெளியேறிய ஜேர்மன்வீரர்கள் வெளியே கதவைப்பூட்டி விடுகிறார்கள்.

அதைத்தொடர்ந்து தேவாலயத்துக்குள் வெடிச்சிதறல். புகைமேகம். மூச்சுத்திணறுகிறது.

நாங்கள் சாகப்போகிறோம். எங்களை அவர்கள் உயிரோடு கொழுத்தப்போகிறார்கள் என்ற அவலக்குரல்கள். குழந்தைகள் பீதியோடு தங்கள் தாயின் கழுத்தை அணைத்துக்கொண்டு கதறுகின்றன. கருணையை யாசிக்கும் குரல்களின் எதிரொலிகள் தேவாலயமெங்கும் முட்டியும் மோதியும் . புகைமேகம் செறிகிறது. மேலும் மேலும் கதவுகளில் ஓங்கிஅறையும் தாய்மார்கள். என்னசெய்வதென்று அறியாது சுவர்களைத்தடவி பரதவித்துக்கொண்டு நிற்கும்கூட்டம். இந்தக் குரூர அவலத்திற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் யன்னலுக்கூடாக துப்பாக்கிகள் கூட்டத்தை நோக்கி குண்டுமாரி பொழிகின்றன.



என்னகொடுமையிது !

தேவாலயத்துக்குள் ஜேர்மனியர் நடத்திய இந்தக் கோர வெறித்தாக்குதலுக்கு சாட்சியம் சொல்லுவதற்கென்றோ என்னவோ -அதிஸ்டமோ-அற்புதமோ Rouffonche என்ற பெண்மணிமட்டும் அங்கே அடைக்கப்பட்டிருந்த 500க்கணக்கான பெண்களில் இருந்து உயிர் தப்பமுடிந்தது. பலிபீடத்தை ஒட்டி ஊர்ந்து அங்கு இருந்த ஒரு ஏணிப்படிக்கூடாக யன்னலில்ஏறி வெளியே குதிக்கிறார்.

தப்பிவிட்டாரா? அப்படித்தான் தெரிகிறது. தரையில் வீழ்ந்த அவர் எழுந்து ஓடநினைக்கிறார். ஒரு அழுகைக்குரல் அவரைத் தடுத்துநிறுத்துகின்றது. மேலே அண்ணாந்து பார்க்கிறார். ஒரு இளம்தாய் தான் ஏறிவந்தமாதிரியே அந்த யன்னலிற்கருகில் நின்றுகொண்டு "என்னுடைய குழந்தையைக் காப்பாற்றுங்கள்""அவனை உங்களோடு எடுத்துச்சென்றுவிடுங்கள் "என்று சொல்லியவண்ணம் குழந்தையைத்தூக்கி கீழே வீசுகின்றாள். பின் குழந்தையைத் தொடர்ந்து தானும் கீழே குதிக்கமுயன்றார்.

Too late! அந்த மிருகங்களின் துப்பாக்கிச்சன்னங்களுக்கு இளம்தாய் பலியாகி விடுகிறாள். அந்தத்தாய்கருகில் இளம் குருத்தும் மரணித்துக்கிடக்கின்றது. முதன்முதலில் குதித்த பெண்மணிமட்டுமே உயிர்தப்பி வெளியேறமுடிகிறது. அந்த ஜேர்மன் மிருகங்கள் தேவாலயத்தைத் தீயிட்டுக்கொழுத்துகின்றனர்.

தீ எரிகுது ! தீ எரிகுது ! தீ எரிகிறதே !

Oradour எரிகிறது. அந்த அழகியகிராமம் எரிகிறது. அந்தப் பிரெஞ்சுக்கிராமத்து ஆண்கள் ஆடித்திரிந்த தெருக்கள், கன்னியர்களை அணைத்துத்திரிந்த சந்துகள், அந்தக்கோடையில் முதியவர்கள்ஆறுதலாய் இருந்துபேசி மகிழ்ந்த சந்திக்கிணற்றோரம் சின்னக்குழந்தைகள் குறுநடைபழகிய பசும் தரைகள் அனைத்தும் கருகுகின்றன.

ட்ராம் வண்டிகளின் ஓசைகள் என்றென்றைக்குமாக ஓய்ந்துவிட்டன. அந்தக்கிராமத்தின் தபால் பெட்டியில் கடிதங்கள்போட அதற்குப்பிறகு அந்தக்கிராமத்தில் ஆட்கள்இருக்கவில்லை.
இந்தக்கொடூரமான கொலைச்சம்பவம் நடந்து முடிந்த இரண்டு தினங்களுக் குப்பின் கிராமத்திற்கு மீண்டும் நுழைந்த நாசிகள் அந்தக்கொலைச் சம்பவத் திற்கான கடைசித்தடையத்தையும் அழித்துவிடும் நடவடிக்கையில் துரிதமாக இறங்குகிறார்கள். சடலங்கள் அவசரமவசரமாக புதைக்கப்படுகின்றன. பிற்பாடு அந்தக்கிராமத்திற்கு நுழைந்தவர்களால் எஞ்சியபிரேதங்களையே காணமுடிந் தது.

ஏனிந்தப்படுகொலைகள்?
காரணங்கள் எதற்குத்தானில்லை.
ஒரு துண்டுப்பிரசுரத்தைப் போல நம்பிக்கை தரக்கூடிய வார்த்தைகள் நம்மிடம்தானில்லை.
நூற்றுக்கணக்கான பிரெஞ்சுக்கிராமங்களைப்போல பரபரப்பான கலக்கத் தோடு எந்தச்சம்பந்தமும் இல்லாமல் அமைதியின் அடிநாதமாகத்திகழ்ந்த Oradour-sur-glane என்ற அந்த அழகிய கிராமம் glane நதிக்கரையில் நீரலைகள் சுமந்துவரும் தென்றலில் லயித்தவாறு மீன்பிடித்து மகிழ்ந்த அந்த நாட்கள் என்றென்றைக்குமாகத் தொலைந்தே போய்விட்டன. செல்வமும், சிறுமையும் , சோம்பலும் , சுறுசுறுப்பும் , குதூகலமும், கும்மாளமும் ஜீவகளை ததும்பி நின்ற அந்தக்கிராமம் தன் இறுதிச்சாவைத் தழுவிக்கொண்டது.

மனித குலத்தின் மாட்சியாமனித குலத்தினது மனச்சாட்சியை உலுக்குகின்ற இந்தக்கோரச்சம்பவம் நடந்துமுடிந்த அந்தக்கிராமத்துத்தெருக்களில் அமைதி யாக நடக்கிறோம். நிறைய உல்லாசப் பயணிகள்தான். ஆனால் அமைதியாய் .... மௌனத்தை உறையவைக்கும் அமைதியாய்..... இடையிடையே கமெராக்கள் கிளிக்கிடும் சத்தம். நாங்கள் அமைதியாய் நடக்கிறோம்.

o

இந்தக் கொடூர நடவடிக்கையை வர்ணிப்பதற்கு பிரெஞ்சு மொழியில் வார்த்தைகள் இல்லை. ஆனால் இந்தக் கொலைப்பாதகத்தைச் செய்தவர்கள் தங்கள் சொந்த அன்னைபூமிக்கெதிராக கொடும்பாவம் புரிந்தவர்களாவர் என்ற வார்த்தைகளைக்கொண்ட பிரசுரத்தை காணமுடிந்தது.

இந்த அழிவுகளில் இருந்தெல்லாம் நாம் கற்றுக்கொள்ள ஏதாவது உண்டா ?.

இல்லை நாம்தான் கற்பிக்கப்ப பிறந்தவர்களாயிற்றே!.

மு. நி.

# "ஆடைகள் வாங்குவதற்காக.."

## சிறுகதை தொடர்பாக..

- பிரபாமனுஷன்.

எனது 'ஆடைகள் வாங்குவதற்காக' சிறுகதைக்கு (ஓசை, இதழ் -8) வந்திருந்த வாசக விமர்சனக்கடிதம் ஒரு விவாதத்தைத் தூண்டுகிறதா என்பது என்னைப் பொறுத்தவரை கேள்விக்குறியே. ஏனெனில் கதையின் சாராம்சத்தை சரியாகப் புரிந்துகொள்ளாமலும் கதையின் மூலத்தைச் சரியாகக் கிரகிக்காமலும் எழுதப்பட்ட ஒன்றுகவே அது அமைகின்றது. இருந்தாலும் இந்தப் புரியாமையைத் தெளிவுபடுத்துவதற்காவது அதற்குப்பதில் எழுதவேண்டியது கடமையாகிறது.

விபச்சாரம் பற்றியும் விபச்சாரிகள் பற்றி இந்தச்சமூகம் கொண்டிருக்கும் மதிப்பீடுகளை சிந்திக்கத்தெரிந்த ஒரு விபச்சாரியின் மனஉணர்வுகளூடாக வெளிப்படுத்தமுடியுமானால் அது எப்படியிருக்கும் என்ற சிந்தனையின் வெளிப்பாடு தான் இச்சிறுகதை. கலாச்சாரம், - குடும்பம் என்கின்ற வெளிப்போர்வைகளால் மூடப்பட்ட ஆணாதிக்க அழுக்குகளை அவள் சலவை செய்யாமல் அழகுபடுத்தாமல் அப்படியே சொல்லிவிடுவது சற்றுக்காட்டமாகத்தானிருக்கும். இதற்கு நான் என்னசெய்யமுடியும்? உண்மை எப்போதும் சுடும்தான்.

ஒரு அடிப்படையான பொருளியல் கட்டமைப்பில் இருந்துதான் சரியான ஆசாரங்களும் ஒழுக்கங்களும் உருவாகமுடியுமேதவிர கலாச்சாரம் பற்றிய காட்டுக்கூச்சலால் இவற்றைச்சீர்செய்தல் முடியாததாகும். இதனாலேயே உழுத்துப்போன இந்தச்சமூக அமைப்புமாறும் வரையில் விபச்சாரிகள் உருவாவதை தடுக்கமுடியாது என்ற கருத்தையே எனது கதாநாயகி தனது இறுதிவரிகளில் சொல்கிறாள்.

இந்தத்தெளிவு இருந்தால் ஆணாதிக்கம் தலைதூக்கி இன்றுகூட 'அவன்சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவான்' என ஆணின் ஒழுக்கக் கேட்டுக்கு வக்காலத்து வாங்குவதோடு இதையெல்லாம் பொருட்படுத்தாது கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் எனப்பொறுத்துப்போவதே பெண்மையின் இலக்கணம் என்றுவேறு அடித்துபேசி பெண்மையை மிதித்துநடக்கும் நிலையில் குடும்பம் என்பது புரிதலின் அடிப்படையில் இணைவதுதானென்றால் சிரிப்பாகத்தானிருக்கின்றது.

எத்தனையோ பெண்களிடம் உறவு

வைத்துக்கொண்ட ஒரு ஆணுக்கு அது வயதுக்கோளாறு மணமானால்

சரியாகிவிடும் என ஏற்றுக்கொள் ளும் சமூகம் சந்தர்ப்பவசத்தால் தவறிவிடும் ஒரு பெண்ணுக்கு உடனேயே நடத்தை கெட்டவள் அல்லது வழுக்கிவிழுந்தவள் என்று பட்டம் சூட்டிவிடுவதோடு அவ ளைத்திருமணம் செய்து கொள்ள முற்படுபவனை கண்ணைத்திறந் துகொண்டும் குழியில் விழுகிறான் என விமர்சிக்கவும் செய்கிறதே ஏன்?

கொஞ்சம் ஆழமாகச்சிந்தித்தால் கற்பழித்தல் என்பது என்ன? அது ஏன் பெண்ணுக்குமட்டும் கற்பிக்கப் படுகின்றது. அதுஏன் ஆணுக்குரிய தாக்கப்படுவதில்லை? "கற்பென்று சொல்ல வந்தோம். அதை இருவ ருக்கும் பொதுவென்று வைப்போம் "பாரதி வார்த்தைகள் இலக்கியத்தில் வாழ்கிறதேயன்றி நடைமுறையில் அர்த்தப்படுத்தப்படாதபோது இந் தச்சமத்துவமின்மையின் முன்னால் எந்தப்புரிதலின் அடிப்படையில் இணைதல் என்பது "நான் ஆண் எதுவும் செய்வேன் நீபெண்அடங் கிப்போ" என்றபுரிதலதலா?

இதையெல்லாம் எதிர்த்து ஒரு பெண் கேள்விகேட்டால் உடனே அவளை "கலாச்சாரத்தைக்கெடுக் கிறாள் ஐயோ ஒழுக்கங்கெட்டுப் போயிற்று" என்று கேட்பதா? ஆமாம் இவ்வளவுநாளும் கெட்டுப் போன ஒழுக்கத்தைத்தானே அவள் சொல்கிறாள். அதற்கு அவளை ஏன் குறைசொல்வது? அது இந்தச் சமுகம் கற்பித்து வைத்துள்ள ஒழுக் கம் என்ற கேட்டினால் வந்ததல் லவா? ஆடை என்பதே மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. அதைக்கூட வாங்க வழியில்லாத பலரை இந்தச்சமுகப்பொருளியல் அமைப்பு உற்பத்திசெய்திருக்கின்ற தென்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் இது வெறும் ஆடம் பரத்திற்காக என்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு அறியா மையே.

ஒரு கவிதையை முழுதாகத்தெரிந்து கொள்ளாமல் அதுபற்றிய தீர்ப் புக்கோ விமர்சனத்திற்கோ வந்து விடுவது கவிதையைக் கொச்சைப் படுத்தல்என்றே நான் கருதுகின் றேன், ஒன்று கதையை முழுதாகப் படித்திருக்கவேண்டும். அல்லது கதைக்கருவைப்புரிந்து கொண்டு அதற்குகந்த வரிகள் மட்டும் கதை யில் கையாளப்பட்டுள்ளது எனத் தெரிந்திருக்கவேண்டும்.

"நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் ஆடைகள் வாங்குவ தற்காக" என்ற அந்தவரிகளில் நிர் வாணம், ஆடைவிற்பது -வாங்குவது என்ற முரணழகுகளால் வாழுவ தற்கு வேறுவழியில்லாமல் விபச் சாரம் நம்மால் தேர்ந்தேடுக்கப்பட் டது என்ற சமுக அமைப்பின் குறைபாடே கவிஞனால் உணர்த் தப்படுகின்றது. ஒரு விபச்சாரி ஏன் உருவாகிறாள்? இதுஎப்போது மாறும் என்ற கேள்விகளின் விடையே இந்தக்கவிதை வரிகளும் கதைக்கருவும். இந்த ஒரு இலக்கிய நயம்கூட புரியமுடியாத நிலையி லேயே வழக்கமான கலாச்சாரச்சீர ழிவு என்ற கூச்சலூடாக பாரதப் பெண்களும் (இவர்கள்தான் மிகத் தீவிர ஆணாதிக்க அடக்குமுறை கட்கு உட்பட்டவர்கள்.) கவிஞன் முகத்தில் காறி உமிழ்தலும் சொல் லப்படமுடியும்.

விஞ்ஞானம் பற்றிக்குறிப்பிட்டதி னால் ஒருவார்த்தை. கட்டற்ற பாலியல் வாழ்க்கைவேறு. விபச் சாரம்வேறு. தவிர வழமைக்குவி ரோதமான, முரடுத்தனமான, உடலுறவுகளே எய்ட்சின் காரணம் என்பது விஞ்ஞானமுடிவு. அத னால்தான் எத்தனைபேர் எத்தனை தடவைகள் ஆனாலும் பாதுகாப் பானஉறைகளோடு உறவுகொள்ள விஞ்ஞானம் வலியுறுத்துகின்றது. தயவு செய்து இதை வைத்துக்கொ ண்டு இதுதான் கதைசொல்வது என கருவைக்கலங்கடிக்காதீர்கள். அது விபச்சாரம்பற்றிய ஒரு சமுகப் பிரக்ஞை என ஏற்கனவே நிறைய விளக்கியாயிற்று.

புவனன்

# அன்புள்ள நண்பனுக்கு..

...இன்று நல்ல மழை. இருந்தும் யன்னலினூடாகத்தெறிக்கும் காலைக் கதிர்கூட எவ்வளவு வெம்மையாக இருக்கிறது. கட்டிற்கரை எறும்புகள் என்னை நிறையவே தொந்தரவு செய்கின்றன.

நேற்றிலிருந்து உடல்வேறு கொதித்துக்கொண்டு இருக்கின்றது. பக்கத்து அறையில் இருந்த ராமச்சந்திரனுக்கு 'பொக்கிளிப்பான்' வந்து நேற்றுத்தான் முழுகினான். எனக்கும் தொற்றிவிடுமோ என்று பயமாக இருக்கிறது.

இந்தவேளையாகப்பார்த்துத்தான் ஏஜென்ஸிக்காரனும் 'ரிக்கேற்' வந்து நிற்பான். ராமச்சந்திரனுக்கும் இப்படித்தான்....
அவன் பாவம் வருத்தத்தில் கிடந்து துடித்துக்கொண்டிருக்க ஏஜென்ஸி ரிக்கற்றோடு வந்து நின்றான்.

"உமக்கு நாளைக்கு Flight ஐஸே! என்ன செய்யப்போறீர் ? ரெண்டு வருஷமா உம்மடகஷ்டம் விளங்கித்தான் இப்ப இவ்வளவு 'றிஸ்க்' எடுத்து அலுவல் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறன். நீர் என்னடாண்டா... வருத்தத் தைத்தேடி வைச்சுக்கொண்டு நிக்கிறீர். நான் என்னேஸ்ஸே செய்யிறது !"

ஏஜென்ஸி நல்லாவே நடித்தான்.
ராமச்சந்திரன் அழுதான். விக்கி விக்கி அழுதான்.
பார்க்கப்பாவமாக இருந்தது.

எங்கள் 'லொட்ஜில் எல்லாமாக அறுபதுபேர் வரையில் இருக்கிறோம். 'பாங்கொக்' நகரத்தில் எல்லாமாகப் பார்த்தால் ஆயிரம்பேருக்கு மேல் வரும்.

எல்லோரும் என்னைப்போலவே வெளிநாட்டு ஆசையில் வெளிக்கிட்டவர் கள்தான். ஒவ்வோருவருடைய கதைகளும் சோகம் நிறைந்தவை.
யார் யாருக்கு ஆறுதல் சொல்வது ?

சிவலிங்கம் என்றொரு நாற்பது வயது நண்பர் எங்களோடு இருக்கிறார். இடையிடையே சித்தப்பிரமை பிடித்தவர்போல கத்துகிறார்.

நேற்றுச்சாமமும் என்று அவர் போட்ட அலறல் சத்தம் இன்னமும் என் அறையில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.
நான் இங்கு வந்து மூன்று மாதத்திற்குள் இதுமாதிரி அலறலை பலதடவைகள் கேட்டிருக்கிறேன். ஏதாவது யோசித்துக்கொண்டிருப்பார். திடீரென்று ' ஐயோ என்ர சிவலை' என்று கத்துவார். மீண்டும் பழையபடி எங்காவது வெறித்தபடி இருப்பார். அவரைப் பார்க்கிற எல்லோருக்கும் பரிதாபமாக இருக்கும். அதேவேளை தாமும் இப்படி ஆகிவிடுவோமோ என்ற பயமும் தொற்றிக்கொள்ளும்.

'சிவலை' வேறென்றுமல்ல. அவர் வளர்த்த காளை மாடு. வயலில் ஒருநாள் உழுதுகொண்டிருந்த வேளை 'ஹெலி' மேலால் சுட்டுக் கொண்டு வந்ததாம். தான் கலப்பையையும் மாடுகளையும் அப்படியே விட்டுவிட்டு ஓடி பனைகளுக்குள்ளே ஒழித்துவிட்டாராம். எல்லாம் அமைதியாக, திரும்பி வந்து பார்த்தபோது சிவலை செத்துக்கிடந்ததாம்.
'தறை முழுக்க ரத்தம் மற்றது வெருண்டுபோய் நிக்குது. என்ர சிவலை ஐயோ!
இதை அவர் சொன்னபோது பலமுறை தலையில் அடித்துக்கொண்டார். கேவிக்கேவி அழுதார். கேட்பதற்கே மிகவும் சங்கடமாக இருந்தது.

வீடு, மனைவி, பிள்ளைகளை அவர் நினைக்கும்போதெல்லாம், இறந்துபோன காளை தனித்துநிற்கும் மற்றக்காளை நினைவில் வந்து குறுக்காடுகின்றன.

வரவர அவர் நிலமை மோசமாகிக்கொண்டே போகிறது. இவர் வெளிநாடு போவதோ அல்லது இலங்கை திரும்புவதோ கஷ்டம். பாவம்.

எங்கள் லொட்ஜில் ஆண்டுக்கணக்காக இருப்பவர்களும் இருக்கிறார்கள். இங்கு வந்தபின் சிலருக்குப் பிள்ளை கூடப்பிறந்திருக்கிறதென்றால் யோசித்துப்பாரேன்!

ஒவ்வோருநாளும் நாளை நாளை என்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஏஜென்ஸியும் அப்படியே வடிவாகக் கதைத்துக் கொள்கிறான். இடையிடையே ஏயர்போர்ட் வரையில் கூட்டிக்கொண்டுபோய்த் திருப்பிக்கூட்டிக்கொண்டு வருகின்றான். இன்று நிலைமை சரியில்லை. முதல் போனது பிடிபட்டுப்போச்சு. அடுத்த றிப் பார்ப்பம் என்பான்.

எங்களுக்கு இப்ப எல்லாம் விளங்குகிறது. ஆனால் என்ன செய்வது ! ஒன்றா இரண்டா! நாலரையை அல்லவா அவன் கைகளுக்குள் திணித்திருக்கிறோம். எல்லோருக்கும் சனியன் ஏழரையில் என்பார்கள். ஆனால் எங்களுக்கு இப்போ நாலரையில்.

என்னுடைய அறையிலிருக்கும் நாகராஜனும் இன்று ஏயர் போட் போய்த் திரும்பி வந்தவன். இது அவனுக்கு நாலாவது முயற்சி. வீட்டிலிருந்து வெளிக்கிட்டபோது இவனும் நாலரையோடு தான் வெளிக்கிட்டவன். இப்போ இரண்டோடு நிற்கிறான். முதல் தடவை மொஸ்கோவில் வைத்துத்திருப்பி அனுப்பப்பட்டவன். இரண்டாவது தரம் ஆபிரிக்கநாடொன்றில். மூன்றாவது தடவை இந்தா! சுவிஸினுள் போய்விட்டேன் என்று நுழைய போடரில் வைத்து....

சின்ன வயதில் குடும்பமானவன். குடும்பம் கஷ்டம். கஷ்டப்பட்டுக் கட்டி முடித்த வீடும், ஆமி பாதுகாப்பு என்று கிளியர் பண்ணிக் கொண்டுவர தரைமட்டம் ஆனது. அதிகம் கதைக்கமாட்டான். சாப்பிடமாட்டான். சிலவேளைகளில் எங்காவது ஒரு மூலையில் இருந்து தேம்பித்தேம்பி அழுது கொண்டிருப்பான். பாவம். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது ?

'பேயறைந்தது போல' என்று கேள்விப்பட்டிருப்பாய். நேரில் பார்க்கவேண்டுமா? உடன் இங்கே வா. எங்கள் எல்லோர் முகங்களும் அப்படித்தானிருக்கும். வெளியிலிருந்து வருபவர்களைத்தவிர.
இங்கு பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், கனடா போன்ற நாடுகளிலிருந்தும் வருகிறார்கள். தங்கள் சகோதரர்களை -மனைவிமார்களைக்கூட்டிப்போக அல்லது ரூறிஸ்டுகளாக.
ஏஜென்ஸிகாரர்களிலும் பெரும்பகுதி இவர்கள்தான். இவர்களுக்கு 'சப்' ஏஜென்ட். பிறகு அவருக்கொரு 'சப்' என்று ஏஜென்ஸிகளில் பல வகை.

ஐரோப்பாவிலிருந்து வருகிறவர்களைப்பார்க்க எங்களுக்கு ஏக்கமாக இருக்கும். விதம்விதமான உடுப்புக்கள். கை நிறையக்காசு. உதாரணத்திற்கு ஒரு பிரெஞ் பிராங்கின் பெறுமதி ஐந்து 'பாத்'துக்கள். அதோடு ஐரோப்பிய விலைகளுடன் ஒப்பிடும்போது பொருட்களின் பெறுமதியும் இங்கு காற்பங்காம். பிறகென்ன கேட்கவா வேண்டும் !
வருகிறவர்கள் காசுகளை விசுக்கி எறிவார்கள். எறிகிறவற்றை ஏந்துவதற்கென்றே எங்களில் பலர். நாங்களும்தான் என்னசெய்வது ? இயலாமைதான்.

நாங்கள் இங்கு வந்தவுடன் ஏஜென்ஸிக்காரன் எங்களைக்கொண்டுபோய் U. N. O வில் அகதியாகப்பதிந்து விடுவான். U. N. O எங்களுக்கு உதவிப்பணமாக மாதாந்தம் மூவாயிரம் பாத்துக்கள் தரும். இந்தப்பணம் ஒருவர் வாழுவதற்குப் போதுமானதல்ல. இருந்தபோதும் இதாவது கிடைக்கின்றதே என்ற திருப்தி. இதைவிட வேறெந்த உதவியும் எமக்குக்கிடைப்பதில்லை.

தாய்லாந்து நாட்டில் தங்குவதற்கு இரண்டு மாதம் மட்டும்தான் விசா தருவார்கள். திரும்ப விசா 'றினியூ' பண்ணுவதாக இருந்தால் வேறுநாட்டுக்குப் போய்த்திரும்பவேண்டும். அவர்களுடைய நாட்டில் அப்படி ஒரு சட்டம்.
நாங்கள் பக்கத்திலுள்ள லாவோஸ் நாட்டிற்குச் சென்று திரும்புவோம். இதற்குரிய செலவு இரண்டாயிரம் பாத். அதுவும் இந்த மூவாயிரம் பாத்திற்குள்தான் என்றால் யோதித்துப்பாரேன் !
ஐரோப்பாவிலிருந்து வரும் நண்பர்களுக்கு நாங்கள் மலிவான கடைகள் தேடிக்காண்பிப்போம். பின் அவர்கள் வாங்கும் பொருட்களை காவியும் கொடுப்போம். அவர்கள் ஒய்யாரமாக நடந்து வருவார்கள்.
இந்த நண்பர்கள் யார் என்ற சந்தேகம் எழுகின்றதா? வேண்டாம். அவர்கள் ஐரோப்பியர்கள் அல்ல. 'சகோதரர்கள்' தான்.
சகோதரர்கள் எங்களுடன் பிரெஞ் மொழி பேசுவார்கள். டொச் மொழி பேசுவார்கள். நாங்கள் பேந்தப்பேந்த முழிப்போம். அவர்கள் கெக்கட்டம் விட்டுச்சிரிப்பார்கள். ஆனால் ஆங்கிலம் மட்டும் கதைக்கிறார்களில்லை.

எனக்கென்னவோ எங்கள் சகோதரர்களைப்பார்க்கவும் பரி

தாபமாகத்தான் இருக்கிறது. சரி போகட்டும்.

ஓ ! எங்கள் ரெலிபோஃனை மறந்து விட்டேன்.
எங்கள் லொட்ஜிலிருக்கும் அந்த ஒரேஒரு ரெலிபோஃனையும் கேட்டால் பலஆயிரம் கண்ணீர்க்கதைகள் சொல்லும். இதோ ! இப்பவும் அடிக்கிறது. யாருக்கோ தெரியவில்லை. கீழ்மாடியில் இருப்பவர்கள் நெஞ்சு படபடக்கும். ஒருமுறை உன்னிவிட்டு மீண்டும் காத்திருப்பர். அநேகமாக அது லொட்ஜ் முதலாளிக்காகத்தானிருக்கும்.

இந்தக்காத்திருப்பு மிகவும் கொடுமையானது. எனக்கு மட்டும் பெரிதாகச் சொல்லிக்கொள்ள யாரும் இல்லாததால் இந்தப்பிரச்சனையில்லை. சிலர் காலை எட்டு மணிமுதல் இரவு பதினொரு மணிவரை கூட கிலை காத்திருப்பர். ஆனால் 'கோல்' வராது.
மறுநாள்.... மறுநாள்..... மறுநாளும் இப்படியே!

இப்போ எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் விசயங்கள் தெரியவருகின்றன. ஐரோப்பிய அகதி வாழ்க்கையும் நாங்கள் நினைப்பது போல் இல்லையாம்.

பிரான்ஸிலிருந்து, நாடு பிடிக்கவில்லையென்று நண்பன்ஒருவன் ஜேர்மனிக்கு ஓடுகின்றான். அங்கிருந்து இன்னும் பலர் சீ.. இதுவும் சரியில்லை என்று சுவிசுக்கும் கனடாவுக்கும் ஓடுகின்றார்களாம். பிறகு அங்கும் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு..

சுத்திச்சுத்தி எங்கேதான் ஓடுகின்றோம் ?

கடைசியில் எப்படியும் இலங்கைதான். பூமி உருண்டை என்று சொல்லுவதற்கு கலிலியோபிறந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.
நாங்களே போதும்.

o

## ஒரு கடிதம்
### யாழ்ப்பாணத்திலிருந்து....

"...... நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கு. இரவில் நித்திரை இல்லை. செலி இரவில் வெளிக்கிட்டால் பங்கருக்குள் ஓட வேண்டி இருக்கு. பொம்பர் வரும் என்ற பயம். 5. 6. 92 விடிய 5 மணி தொடக்கம் மாலை 6. 30 மட்டும் பங்கருக்குள்தான் சீவியம். குடிக்கத் தண்ணீருக்குக்கூடக் கஷ்டம். ஒரே அடிபாடு. ஆனால் ஆமிவரமுடியவில்லை. இப்போ அமைதி. பங்கர் இல்லாத சனங்கள் வயல் தோட்டம் எல்லாம் ஓடிஓடிப்படுத்தபடி. என்ன பாவம்தான் செய்தோமோ? அனுபவிக்கிறோம். இங்கு எவ்வளவு சனம் கைகால் இல்லை.
நான் இப்போ நினைக்கிறேன் சித்தப்பாவுக்கு எழுதி அவர் வேறு நாட்டுக்குப் போனால் நாங்களும் போகலாம் என்று. ......."

# நாய் குரைக்கும் இவர்கள்.

மரணிக்க எனக்குப்பயமாக இருக்கிறது
குழியைத் தோண்டுவார்கள்,
என்னை இலகுவாகத் தாக்க.

எந்த எதிர்த்தாக்குதலும் இன்றி
பச்சை காயுமுன்னர்
என் இதயத்தைக் குத்துவார்கள்
கண்களைப் பிடுங்குவார்கள்.
நாக்கை அறுத்து
ஓர் இலையில் எடுத்துக்கொண்டு
கொடுப்பை வெட்டிக்கிழிப்பார்கள்.

நான் மரணிக்கமாட்டேன்.
இரும்பாகவும், உருக்காகவும் மாறிவிடுகின்றேன்.
என் இதயம் இருக்கட்டும் இவர்களைப்
பாடியபடியே.
என் கண்கள் இன்னும் இவர்களை
நன்றாக அவதானிக்கட்டும்
நாக்கு இவர்களின் குறையைச்
சொல்லட்டும்.

என் அடக்கப்பலகையைக்கூட
இவர்கள் எரிப்பார்கள்.
என் 'மீசான்' கட்டையில் குந்தும்
குருவியைக் கூட
சுடுவார்கள்.
மண்குவியலில் முளைக்கும் புல்லையும்
இவர்கள் அரிவார்கள்.

நான் இறக்கமாட்டேன்.
எனக்காக வரப்போகின்ற பேய்
வேறு யாரின் பேரிலாவது
ஊரில் திரியட்டும்
அதன் பின்னால் குரைக்க இருக்கின்ற நாய்கள்
தங்கள் வீடுகளைக்காவல் காக்கட்டும்

இப்போதும், குரைப்பது நாய்கள்:
இவர்களைப் பார்த்துத்தான்,
இரவுகளிலும் பகல்களிலும்.

*06. 01. 92*
*( மீசான் கட்டை முஸ்லீம்களின் அடக்கஸ்தலத்தில் நடப்படும் கட்டை )*


கல்முனையிலிருந்து
வெளிவரும்
'இருப்பு' இலக்கிய இதழின்
ஆசிரியரும், தமிழில்
முன்னணிக்கவிஞருமான
சோலைக்கிளி அவர்களின்
"காகம் கலைத்த கனவு"
கவிதைத்தொகுதி
சுவடுகள் பதிப்பகத்தால்
வெளியிடப்பட்டுள்ளது.
ஏற்கனவே வெளிவந்த இவரது
'எட்டாவது நரகம்'
கவிதைத்தொகுதியும்
பலரது பாராட்டுதல்களையும்
கவித்தளத்தில் இவருக்குரிய
சிறப்பினையும் வழங்கியது
குறிப்பிடத்தக்கது.

தொடர்புகட்கு :
சுவடுகள் பதிப்பகம்
Herslebs Gate 43
0578 Oslo 5
Norway.

## சோலைக்கிளி கவிதைகள்


# சோறு போடும் பீங்கானின் புள்ளி.

கடல் நீரில் முளைத்ததுதான் இந்தக்கிராமம்.
எனக்கு
சோறு போடும் பீங்கான்.

தென்னைகளும் பனைகளும் தான்
இந்தக் கிராமத்தின் கால்கள்
கடல்,
இது ஒத்தி விளையாடும் பொருள்.

இங்கு பட்டம் விடுவதில்லை சிறுவர்கள்.
உயிருள்ள பட்டங்களாய்
நூல் இன்றி
வாலும் இன்றித்தான்
யாரும் விடாமலே பல நூறு பறவைகள்
பறக்கின்றன.

ஒரு நாள்
ஒரு பறவைப்பட்டம்
மரத்தில் தொங்கியது.
பிணமாய்.
என் கண் கலங்கியது.




காகங்கள் சத்தம் போட்டுச்சொல்லின
நாங்கள் ஒற்றுமையாய் இருக்கிறோம்,
சிறு தவறு நடந்துவிட்டது,
இது இயற்கை மரணம்
என்று.
இருந்தாலும் என் மனம் அழுதது.
என் சோறு போடும் பீங்கானில்
ஒரு புள்ளி
அழிந்ததைப்போல இருந்தது எனக்கு.

*06. 01. 92*

*( குறிப்பிட்ட கிராமத்தில் தான் நான் கடமை புரிகின்றேன் )*

# அளவுக்கு மிஞ்சினால்..



தனக்கு மிஞ்சினால் தானதருமம் செய்யலாம் அப்படித்தானே அறிந்துள்ளீர்கள். அப்படியல்ல. கொட்டிவிடுதல், நிலத்துள் புதைத்துவிடுதல், அல்லது அழித்துவிடுதல். ஏனெனில் சந்தைக்கு, நுகர்வுக்கு பொருள் அதிகம் வந்தால் விலையிறங்கும். இலாபம் அடிபடும், தொழில் ஒழுங்குமுறை குலைந்து போகும். முதலாளி நலிந்து போவான்.

ஆபிரிக்கக் கண்டத்தில், சோமாலியாவில், எதியோப்பியாவில், சூடானில் பட்டினியால் மக்கள் மரணித்துக்கொண்டிருக்கிறார்களே ? அவர்களில் கருணைகொண்டு, காருண்யம்கொண்டு வீணாக்கப்படும் உணவுப் பொருட்களை வழங்கலாமே என்றுதானே உங்கள் மனம் நினைக்கின்றது.

அப்படியானால் மூளையில்லாதவர் நீங்கள்.

உற்பத்தி, சந்தை, இலாபம், பற்றித்தெரியாதவர்.

இலாப வேட்டையை விடவா மனித உயிர் பெரிது?

ஐரோப்பிய சமுகத்தின் நுகர்வுக்கு ஆறுமில்லியன் தொன் அப்பிள்கள் போதுமானதாயிருக்க, பத்து மில்லியன் தொன் அப்பிள் விளைந்து அறுவடையாக்கப்பட்டுவிட்டது. உபரியான அப்பிள்களை என்னசெய்யலாம்.

பிரெஞ் உற்பத்தியாளர்கள் மூளையுள்ளவர்கள்.

தெற்குப்பிரான்சின் Vaucluse பிரதேசத்தின் Durance ஆற்றுப் பள்ளத்தாக்கில் மூன்று மீற்றர் உயரத்திற்கு, இருபது மீற்றர் அகலத்திற்கு. அரைகிலோமீற்றர் நிலத்தில் மீந்த அப்பிள்களைக் கொண்டுவந்து கொட்டிவிட்டார்கள். அழிந்து போக....

கொட்டப்பட்ட அப்பிள்களின் பெறுமானமானது ஐநூறு மில்லியன் பிரெஞ் பிராங்குகளாகும். அதிகம் விளைந்ததால் நட்டப்பட்டுப் போன உற்பத்தியாளர்களுக்கு ஐரோப்பிய சமுக அரசுகள், சந்

தைவிலையின் கால் பதியை வழங் கவுள்ளனவாம்.
இது அப்பிள் கதை.

உணவுத்தானியமான கோதுமை அதிகம் விளைந்தால் அமெரிக் காவானது கடலில் கொட்டிவிடு கின்றது.

பாவந்தானே சுறாக்களும், திமிங் கிலங்களும்.

ஆபிரிக்க மனிதனே பசி உனக்கு மரணத்தைத்தானே கொண்டு வருகின்றது.



o

**நூ**லிழையில் தொங்கிக்கொண்டிருந்த 'ஐரோப்பா' செப்டம்பர் 20ம் திகதி இரவு ஆசுவாச பெருமூச்சு விட்டுக்கொண்டடது.
'ஒன்றிணைந்த ஐரோப்பா' ஒரு நெடு நாளைய கனவு. வாள் முனையிலும், துப்பாக்கிக்குழாயிலும் காணப்பட்ட அக்கனவுகள் நீடிக்கமுடியாமல் நொறுங்குண்டதுதான் வரலாறு. பிரான்சின் நெப்போலியன் போனபாட்டும், யேர்மனியின் அடால்ப் ஹிட்லரும், அகண்ட ஐரோப்பாவுக்கு அப்பாலும் கனவு கண்டவர்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னால் பெல்ஜியம், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி, லக்சம்பேக், நெதர்லாந்து ஆகிய ஆறு தேசங்களிடையே, 1951ம் ஆண்டு பாரிஸில் மேற்கொள்ளப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில், இன்றைய 'இணையும் ஐரோப்பாவுக்கான' விதை ஊன்றப்பட்டது.
'ஐரோப்பிய இரும்பு, நிலக்கரி ஒத்துழைப்பு நாடுகள்' (European coaland steel community) எனத்தம்மை அழைத்துக்கொண்ட இந்நாடுகள் 1957ல் ரோம் உடன்படிக்கையின்படி 'ஐரோப்பிய பொருளாதார சமுக நாடுகள்' (European Economic Community 'E. E. C ) எனத்தம் அடையாளத்தை மாற்றிக்கொண்டனர்.

இதில் இங்கிலாந்து, டென்மார்க், அயர்லாந்து ஆகிய நாடுகள் 1973லும், கிறிஸ் 1981லும், ஸ்பெயின், போர்த்துக்கல் 1986லும் இணைந்து கொண்டதின் மூலம் 12தேசங்கள் கொண்டதாய் 'ஐரோப்பிய சமுகம்' விரிந்து உருக்கொண்டது.

1991 டிசம்பரில் நெதர்லாந்தில்உள்ள Maastricht ல் சந்தித்த 12 தேசங்களினதும் தலைவர்கள் 'ஐரோப்பா ஒரு தேசம்' என்ற கனவின் செயல்முறையை ஒப்பந்தத்தின்மூலம் தொடங்கிவைத்தபோதும் . அதற்கு உயிர் கொடுக்கும் வகையில் பன்னிருதேசங்களினதும் மக்கள் அனுமதியையும் கோரினர்.
பன்னிரண்டு தேசங்களில் ஒன்றான டென்மார்க்கில் ஜூன்மாதத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது 'Maastricht Treaty' கூடாது என டென்மார்க் மக்கள் நிராகரித்து விட்டனர். தொடக்கமே மோசமான அறிகுறியை காட்டுகின்றதென 'ஐரோப்பா' நலன் விரும்பிகள் கவலை கொண்டனர்.

இவ்வேளையில்தான் டென்மார்க் உதைபந்தாட்டவீரர்கள் ஜேர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் 'ஐரோப்பிய வெற்றிக்கிண்ணத்தை' சுவிகரித்துக்கொண்டபோது 'ஐரோப்பா'நலன்விருப்பியான டென்மார்க் பிரதமர் 'அவர்களுடன் இணைய முடியாவிட்டால் வென்றுவிடுதல் சரியானது' என ஜோக்கடித்து தன் அரசியல் தோல்வியை சமாளித்துக்கொண்டார். டென்மார்க் தோல்வியின் பின்னணியே செப் 20ல் பிரான்சில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பை முக்கியத்துவம் கொள்ளச்செய்தது.
ஆனால் பிரான்ஸ தேசம் இரண்டாய் பிளவுண்டுபோனதோ என எண்ணும்படி 51. 1%ஆம் என்றும், 48. 9%இல்லையென்றும் வாக்களித்துள்ளது. இவ்வொப்பந்த எதிர்ப்பாளர்களாய், இனவெறிகக்கும் லூபென்(Lepen)தேசிய முன்னணியும், பழம் பெரும் பிரெஞ் கம்யூனிஸ்டான ஜோர்ஜ்மார்சே(Georges marchais) யின் தலைமையிலான பிரெஞ் கம்யூனிஸ்ட் கட்சியும் தற்காலிகமாக வேனும் இணைந்து கொண்டதும் ஆச்சரியம்தான்.

'உலகத்தொழிலாளர்களை ஒன்று படுங்கள்' எனக்கூறும் நீங்கள் ஐரோப்பிய தேசங்கள் ஒன்றிணைவதை ஏன் எதிர்க்கிறீர்கள் என்ற கேள்வியை எழுப்பிய போது 'நாங்கள் உலக முதலாளிகள் ஒன்றுபடுதலைக் கோரவில்லை' (They say they don't want the bankers of the world to unite) எனக்கூறினர். சர்வஜன வாக்கெடுப்பின் வாக்களிப்பு முறைபற்றி கணித்த ஆய்வாளர்கள், நகரவாசிகள், பணக்காரர், படித்தவர்கள், 'ஆம்' என வாக்களிக்க விவசாயிகள், தொழிலாளிகள், படிப்பறிவில்லாதர்கள், வேலையற்றவர்கள், மத்திய வயதினர் 'இல்லை'எனவும் வாக்களித்துள்ளதைச்சுட்டியுள்ளார்கள். இது சமூகப்பிரிவின் துல்லியத்தை வெளிப்படுத்தி உள்ளதுடன், ஐரோப்பா முழுவதும் இவ்வண்ணம் பிளவுறுமானால் , மோசமான விளைவுகளை தோற்றுவிக்கும் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

பிரான்சின் சர்வஜன வாக்கெடுப்பு வெற்றியளித்தபோதும் ஐரோப்பிய நாணய மாற்றுச் செயல்முறையில் ஏற்பட்டுள்ள சிக்கலும், நெருக்கடியும் இன்னமும் 'இணைந்த ஐரோப்பியகனவு' நூலிழையில் தொங்குகிறது என்பதையே காட்டுகிறது.

○

இருபெரும் வல்லரசுகளாய் உருவெடுத்த, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியநாடுகளின் வெளியுறவுக்கொள்கையையும், நலன்களையும் சார்ந்து உலகம் பிளவுண்டிருந்த வேளையில் அணிசேராக்கொள்கை செல் வாக்குப்பெறத்தொடங்கியது.
1955ல் ' பாண்டுங்' மகாநாட்டில் கருக்கொண்ட இவ்வெண்ணம் 'அணிசேரா நாடுகளின் இயக்கம் ' என உருப்பெற்றது.
'சுதந்திர' இந்தியாவின்முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவினதும், எகிப்திய ஜனாதிபதி நாசரினதும் யூகோஸ்லாவிய அதிபர் மார்சல் டிட்டோ வினதும் தலைமைத்துவத்திலும் வழிகாட்டுதலிலும் இவ்வியக்கம் வளர்ச்சியுற் றது.
1961ல் யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரெட்டில் முதல் அணிசேரா நாடுகளின் மநாடு நடாத்தப்பட்டு இந்தியாவினால் முன்மொழி யப்பட்ட 'பஞ்சசீலம்' முதன் அடிப்படைத்தத்துவம் என ஏற்கப்பட்டது.
1976ம் ஆண்டில் இலங்கையிலும் இம்மநாடு நடத்தப்பட்டதுடன் இலங்கை யும் தலைமைப்பாத்திரத்தை வகித்தது. இலங்கைப்பிரதமர் என்ற வகையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை ஏற்றார்.
இம்மாநாடு நடந்தவேளையில் கொழும்பு வெலிக்கடைச்சிறையில் இலங் கைத்தமிழ் இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததும், அவர்கள் தம்பிரச் சினையை வெளியுலகுக்கு அறிவிக்க இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தும் வகை யில் சிறைக்குள் உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்தியதும் அன்றய சம்பவங்கள்.

இம்மாதத் தொடக்கத்தில் இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகார்த்தா வில் அணிசேரா நாடுகளின் பத்தாவது மாநாடு நடைபெற்றது.
109 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் இவ்வணி சேரா இயக்கம், கூடுதலும் கலைதலுமாய் உள்ளதே தவிர காத்திரமான அமைப்பாய் வளரமுடியாமல் திண்டாடுவதை அவதானிக்க முடிகின்றது.
ஐ.நா மன்றத்திற்கு அடுத்ததாய் அதிக நாடுகள் அங்கத்துவம் கொள்ளும் இவ்வணிசேரா அமைப்புக்கு தொடக்கக்காலத்தைப் போன்று ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை மூன்றாம் உலக நாடுகள் வழங்க முடியாதுள்ளமையே இதன் முக்கிய குறைபாடாகும்.
கிழக்கு மேற்கு என்ற தத்துவப் பிளவு தகர்ந்து புது உலகக் கோட்பாடு என்னும் ஒரு வல்லரசின் சுரண்டும் ஒழுங்கு வட்டத்துக்குள் சிக்கும் அபாயகரமான கட்டத்தில் இவ்வகை அமைப்பின் செயற்பாடு முக்கியம் மிக்கதாகும்.

வறிய தெற்கும், வசதிமிக்க வடக்குமென மாறியுள்ள நிலையில் வறிய நாடு களை உள்ளடக்கிய இவ்வமைப்பு வீறுடன் எழுந்து நிற்கும் என எதிர்பார்கை யில் தளர்ந்து செல்வது நாம் கவலை கொள்ளும் அம்சமாகும். ஆயினும் இம்முறை "ஜகாத்தா" மகாநாட்டின் இறுதிநாள் வெளியிடப்பட்ட ஜகார்த்தா செய்தியானது முக்கிய கோரிக்கையை சுட்டியிருந்தது ஆறுதல் தரவல்லது. அச்

கறுத்தானின் பக்கம்

செய்தி உலக ஒ ழுங்குப் பிரச்சனையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஐ.நா மன்றமானது ஐந்து நிரந்தர நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச்சபையையும், அவ்வைந்து நாடுகளும் (அமெரிக்கா, ருசியா, சீன, பிரான்ஸ், இங்கிலாந்து) ஐ.நா வின் எந்தத் தீர்மானத்தையும் நிராகரிக்கும் வீட்டோ அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றது. இப்பாதுகாப்புச்சபை மூன்றாம் உலக நாடுகளையும் உள்ளடக்கியதாய் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இம்மா நாடு உரத்து எழுப்பியுள்ளது.

- கறுத்தான்.

## நீ நலமா ?

என் வயல் எரிந்த கறுப்புப்புகை
ஆகாயத்தில் அலைந்து கொண்டு வந்ததை
நான் நேற்றும் கண்டேன்
நீ நலமா ?

சில நாட்களாக
என் முற்றத்துக்கொய்யாவில்
முடியாத நிலையிலுள்ள
அந்தக் காக்கையின் கூடு
ஒரு நவீன ஓவியம் போல் தெரிகிறது.
நீ நலமா ?

ஒரு பன்கூடை போல
என் கிராமம்
பிரிந்து பிரிந்து
இன்னும்
பிரிந்து கொண்டிருப்பதை
வந்து பார்.

நெருப்புக்காச்சலோடு
படுத்திருந்த உன்னை
குசலம் விசாரிக்க வந்த காற்று
உன் மேல்
ஏறி மிதிப்பதாகக் கனவு கண்டேன்.
நீ நலமா ?

அடுத்த மடலை நீ அனுப்பும்போது
இதழ்களால் துவைத்து
ஈரமாக்கி அனுப்பு.
ஏனெனில்
என் அன்னத்தின் கடிதம்
இன்று அரைப்பகுதி கருகிய நிலையில்
என் கரம் கிட்டியது

றிஸ்வியூ முகமத் நபீல்.
மட்டக்களப்பு

# ஒரு காயமுற்ற தேசப்பற்று மிக்கவனின் குரல்

பயாத் ஜேமிஸ்
கியூபா

மரணம் சீழ்க்கையடித்துச்செல்கிறது
மரங்களும் மனிதர்களும் வீழ்கிறார்கள்;
விமானங்களும் மிருகங்களும் வீழ்கின்றன;
மலர்களும் ஜன்னல்களும் வீழ்கின்றன;
துரோகிகளும் தளிர்களும் வீழ்கின்றன;
குழந்தைகளும் வெடிகுண்டுகளும் வீழ்கின்றன.
மரணம் சீழ்க்கையடித்துச் செல்கின்றது.
நான் சுழப்பட்டிருக்கிறேன் புகையாலான மலையாலும் நெருப்பாலும்.
ஏப்பிரல் அணிவகுக்கிறது தன் வண்ணங்களின் திருவிழாவை.
என் விழிகளின் முன்னே
அழகிய வசந்தம் தீயாக மாறி விட்டது.
நான் சுவாசிக்கும் காற்றில் வெடிமருந்து இருக்கிறது.
எனது இரத்தமும்கூட வெடிமருந்தின் வாடை அடிக்கிறது.
மரணம் சீழ்க்கையடித்துச் செல்கிறது.
அன்றையதினத்தின் ஆழத்தில்இருந்து
ஒரு முணுமுணுப்பு வருகிறது.
மரணத்தின் சீழ்க்கையொலி நிற்கிறது.
இப்பொழுது எனக்குக்கேட்பதெல்லாம் மற்றோர் குரல்.
ஆழமான மிகுந்த சக்திவாய்ந்த குரல்.
எப்பொழுதும் என்னுடன் மிகவும் நெருக்கமான குரல்.
இந்தத்தேசம் என்னுள் பாடுகின்றது!
காயமுற்ற வீரமிக்க தேசம்!
அழகான வீரமிக்க தேசம்!
உன்னதமான வீரமிக்க தேசம்!
எனக்குள் இருக்கும் தேசம், எனது சகோதரர்கள்,
எனது ரத்தம், எனது எலும்புகள்!
தேசமே, இன்றும் என்றும் விடுதலை
தேசமே, அழிவற்ற தேசமே
உனது காயமே எனது காயம்.

உனது விழிகள் என் விழிகளைப் பார்க்கிறது.
உனது வெற்றியே எனது வெற்றி
இந்தத் தேசம் என்னுள் பாடுகிறது!
ஏப்ரல் அணிவகுக்கிறது. தன் வண்ணங்களின் திருவிழாவை
என் விழிகளின் முன்னே
இந்த மண் முழுவதுமே அசைகிறது
குதிக்கிறது. சுவாசிக்கிறது.
ஒவ்வொரு மரமும் ஒரு தீப்பந்தம்.
நான் உலுக்கப்படுகின்றேன் தோத்திரப்பாடல்களாலும்
மின்னலாலும்
என்னருகே கிடக்கிறது ஒரு பிணம்,
தன் தோளில் வெற்றியைச் சுமந்தபடி .
டாங்கிகள், பீரங்கிகள் நொருக்குகின்றன.
கருத்த நட்சத்திரங்கள் வீழ்கின்றன
பிரகாசமான சிவந்த புல்லின்மேல்!
எனது காயம் ஒரு அழகான மலர்
எனது தாய் காதலி
இருவரின் கூந்தலுக்கும் .
எனது இரத்தம் ஒரு அழகான மலர்
என் அதியற்புதமான தேசத்திற்கு!
வாழ்க்கை என்னுள் பாடுகிறது!
ஏப்ரல் அணிவகுக்கிறது தன் வண்ணங்களின் திருவிழாவை
என் விழிகளின் முன்னே.
மீண்டும் என் துப்பாக்கியைக் கையில் எடுக்கிறேன்.

*தமிழ்நாட்டிலிருந்து . . .*
தமிழில் . சித்தார்த்தன்

## உங்களோடு...

வணக்கம்.

சென்ற இதழுக்கும் இந்த இதழுக்குமான இடைவெளி சற்று நீளம்தான். மன்னிக்க.


இலங்கையிலிருந்து வந்துசேருகின்ற ஆக்கங்களும், விமர்சனங்களும் எம்மை உற்சாகப்படுத்துகின்றன. தாய்நாட்டிற்கும் எமக்கும் பாலம் அமைப்பதான எம்நோக்கில் ஒரு படி வளர்ந்து விட்டதாக ஒரு பூரிப்பு.

மேலும் ஆக்கங்கள் , விமர்சனங்கள் அனுப்பிவைத்த அனைத்து இலக்கியநண்பர்களுக்கும் நன்றிகள்.

சென்ற இதழில் எதிர்பாராத விதமாக நான்கு சிறுகதைகள் வந்து சேர்ந்துவிட, என்ன ! இம்முறை சிறுகதைச்சிறப்பிதழா ? என உங்கள் புருவங்கள் உயர்ந்தன.

அந்தவகையில்பார்த்தால், என்ன! இம்முறை கவிதைச்சிறப்பிதழா? நீங்கள் தான் சொல்லவேண்டும் !

- ஓசை.

# இரண்டு கவிதைகள்

சிவரமணி(?)

### சிணுங்கிய வானம்

அடை மழையானது போல
சின்ன அதிர்வுகள்
வெடியாகிப்போனதால்
திடுக்கிட்ட நாங்கள்
விழிக்கமுன்பு
போர் என்ற
பீதி கவ்விக்கொண்டது.

அந்த நாட்கள்
ஒவ்வொருநாளும்
ஒரே மாதிரித்தானே!
கதிரவன்
வரவிற்கும் மறைவிற்கும்
அர்த்தம் அன்று
தெரியவில்லை. . .

தொடரும் போரின்
அழிவின் கனத்தை
தாங்காத காரணத்தால்
முகங்கள்
கேள்விக் குறிகளாயின.

நகரத்தைவிட்டு
நகர்ந்து விட்டதால்
செவிப்பறைகள் சற்று
ஓய்வெடுத்துக்கொண்டன.

அங்கிருந்து ஒருவர்
வந்துவிட்டதால்
உள்ளம் அலையாய் அலையும்
செய்திகள் அறிய.
ஆவலாய்க்கேட்ட
செய்திகள் யாவும்
அவலமாய் இருக்கும்.
முடிவில்
அழுகைதான் மிஞ்சும்!

**குறிப்பு.**

சிவரமணியின் பிரசுரிக்கப்படாத கவிதை ஒன்றினை, அவருக்கு அஞ்சலிசெலுத்தும் வகையில் ஓசை. இதழ் 9ல் வெளியிட்டிருந்தது. தற்போது வேறு இரு கவிதைகள் இங்கு பிரசுரமாகின்றன.
இவையும் அவருடையதாகவே இருக்கவேண்டும். ஒன்று 'அருந்ததி' எனவும், மற்றது 'மதியழகன்' எனவும் கவிதைகளின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.
இவை அவரின் புனைபெயர்தானா என்பது தெரியவில்லை. ஆனால் அவரது கையெழுத்துடன் கூடியதாகவே இக்கவிதைகளும் காணப்படுகின்றன. கவிதை சொல்லல் முறையும், சொல் அமைப்பும் அவருடையது போன்றே உள்ளன.
இதன் உண்மை பற்றி அவரிடத்தில் நட்பும், நாட்டமும் அதிகம் கொண்டோர் ஆய்ந்து தெளிவுறுத்துதல் கடமையாகும்.

கி. பி. அரவிந்தன

நாட்களின் நகர்வுகள்
எரிச்சலைத்தந்தது.
விட்டுவந்த வீடும்
சுற்றியிருந்த உறவும்
நினைவுகளில். . . .
கனத்தைக்கொடுத்து
கலங்கவைத்தன. . .
சின்னப்பென்சிலும்
வர்ணப்பெட்டியும்கூட
கனவுகளில் வந்து
ஏங்கவைத்தன.
இன்னும்
எத்தனை எத்தனை
சின்னஞ் சிறுசாய்
உறவுவைத்தவை.

ஓ ! விட்டு வந்தவை
சடப்பொருள்கூட
சஞ்சலம் கொடுக்க
உயிரான உறவுகள்
மூச்சையாகும்
நினைவுகள்கூட.

சிந்தனைகள்கூட
சிறைப்பட்டதுபோல
நினைவுகளிற்குக்கூட
தடைவிதிக்கலாம் போல
தாழ்ப்பாளிற்குள்
தவிப்புக்களை அடக்கி
வெளியே வந்தபோது
வெறுமையை
இயற்கை அகற்றியபோது
அதனோடு கொண்ட உறவு
ஆழமாய் மனசுக்கு
ஒத்தணம் கொடுத்தது.

தொட்டால் சிணுங்கியை
சிணுங்க வைப்பதில் . . .

சொல்லத்தெரியவில்லை
சுகமென்ன கண்டதென்று
கொஞ்ச நாளில் என்
பெருவிரல்
அணைப்பில் - அது
சுகம் கண்டு கொண்டதோ - என
எனக்குள் ஒரு
நினைப்பு.

செல்ல அணைப்பும்
சின்னச்சிணுக்கமும்
எனக்குள் உறவை
ஆழமாய்ப் பதித்தது!

நினைவுகளிற்கு
வெள்ளையடித்து
வெறுமையாக்கிவிட்டு
வரம்புகளில்
கால்கள் பதிக்கையில்
கருகிவிட்டிருந்த
கத்தரிகூடச் சொன்னது
காலத்தின் கொடுமையை.

அங்கு,
சந்தோஷத்தின்
ஏழ்மையில்
ஏழுவர்ணச் சேலையைக்
கலைத்துவிட்டு
கருமையில்
காட்சி தந்த வானமகள்
இங்கு -
செழுமையாய்
காலையும் மாலையும்
வந்து போனது
மனசுக்கு மகிழ்வைத்
தந்தது.

அவளின் . . .
வண்ணச்சேலைகளின்
வர்ணக்கலவைகள்
திகைக்க வைத்தன
நெய்தவனை
நினைக்க வைத்தன. . . . .

நீண்ட பாதையில்
"யூக்கிலிப்டேர்ஸ்" சோடிகள்
காத்து வீசையில்
"முட்டு முட்டு" விளையாடையில்
சேர்ந்துகொண்டு
கும்மாளம் போட
மனசு துடிக்கும் !

கொஞ்ச நேரம்தான்
எல்லாம்.
வெள்ளையடிச்ச

நினைவுகூட அழுக்காகி
அனுங்கத்தொடங்கும்.
நிகழ்காலம் சொல்லி....


பின்பு என்ன
பதிந்த செய்திகளும்
அழிக்கமுடியா
நினைவுகளும்-
அவலப்படுத்தும்.

அதனூடே -
வெட்டப்பட்ட
காட்டிற்குள்
எஞ்சி நின்ற
வீரமரங்கள்
வீசுகின்ற காற்றினூடே
சொல்லிநின்றன
தங்கள் வீரச்
செய்திகள்

அவற்றில்கூட
சின்னத்தழும்புகள்
வடிந்ததஉதிரங்கள்
ஷெல்லினால் தான்
உண்டான விளைவுகள்

நினைவு படுத்தின....
நகரத்தின் நினைவுகளை
சோகத்தின் பிடிப்பால்
சோர்வுக்கு மாத்திரம்
சொந்தமானது
அந்த நாட்கள்.

OCT' '87



# நிகழ்வுகளில் முகங்கள்....

ச்சீ என்று சிணுங்கும்

சின்ன இவன் உள்ளம்
ஏதேதோ நினைக்கும்.
தூரத்து நினைவுகள்
தூங்கிப்போயுங்கூட
காலத்தின் கனவுகள்தான்
கண் மூட வில்லை,
இன்னும்.
பொழுதுதான்
புலர்ந்த பாடில்லை.
புண்பட்ட மனதிலே.

சுதந்திரமே !
உன் புன்னகையின்
தடங்கள்
மறையாத கனவுகளாய்
இருக்கையிலே.
மரிக்கின்ற என் ஆசைகள்
மௌனத்துள் மறையாது
வேறென்ன செய்வது?

எனக்கேதோ பிடிக்கவில்லை.
எது என்று சொல்ல....
எல்லாமே.
ஏட்டியும் போட்டியும்
எரிச்சலும் இறுமாப்பும்
கனத்துப்போன மரபும்
மரித்துப்போன மனமும்
நம்மவரின்
அலுத்துப்போன கதையாச்சே.

நினைத்துப்பார்க்கிறேன்,
சில நிகழ்வுகளின் முகங்களை.
களைத்துப்போய்
காலை விடவதற்குக்
காலதாமதம்
காரணம்
என்ன தெரியுமோ?
இங்கு பயத்தினால்
ஜீவன்கள்
பதுங்கியிருந்ததை
சூரியன் பார்த்து விட்டதால்
தூங்கிவிட்டான் கவலையுடன்
சிறிது நேரம்.



நாங்களும் அல்லிகள்தான்
ஏனெனில்
சந்திரனைக்காண்பதற்காய்
சடலடங்களாய்
பதுங்கு குழியில் இருந்த
பாவப்பட்ட அல்லிகள்.
ஆனால்,
இந்த நிலவுக்குத்தான்
சற்றுப்பயம்.
முகம் காட்ட முயன்றும்
முடியாத கோழைகள்.
குத்தும் வெட்டும்
வெடியும் கொலையும்
வெறுப்புள்ளும் ஓர் வெறுப்பு.
வேண்டாத இவர்களுடன்.

இறந்த பின்னும்
எங்களால் எத்தனை உதவிகள்....
காட்சிப்பொருட்களாய்
கண்ணாடியிலும்
கழற்றியும் பொருத்தியும்
கையறுந்தும் கால் தொலைந்தும்
முகம் நசிந்தும்
அட்டைப் படங்களாய்
வீதிகளை அலங்கரித்தோம்.

இனிமேலும் எங்களை
மூளை இல்லாதவன் என்று
முறைப்பட முடியாது.
நாங்கள் தான் கண்டோமே
கூழ் முட்டைகளாய்
குருதியுடன் கலந்து.



எம்மண்ணின்
இலைகளும் பூக்களும்
என்ன பாவம் செய்தன.
துளிர்த்திருந்த
புகையிலைச் செடிகள்
மறுநாளே
குருதியில் நிறம் மாறி
வரலாறு படைத்த
மண்ணும் இதுதானே!

எரிகின்ற நெருப்பிலே
இடம் கேட்டுச் சென்று
பின்
சிணுங்கியதால்
அணைந்த நெருப்புக்கு
எண்ணெய் விட வந்தன
எத்தனையோ செத்த உடல்.

விடிந்தபின் இருப்போமா?
இருள்வதற்குள் இறப்போமா?
என்றொரு வாழ்க்கை
அயல் வீட்டுத்தம்பி
ஆறு வயதிருக்கும்
அவனின்
தலையைத் தொலைத்துவிட்டு
தடவித்திரிந்தோம்
இடமெல்லாம்.



பாதையிலே பதிந்து போன
பாவிகள் எங்கள் உடலை
புசிக்க வந்த
காக்கைகள்கூட
கரைச்சல்பட்டுப்போயின.
எலும்புக்கும் தோலுக்கும்
என்ன வித்தியாசம்
இரண்டும் மாவான பின்னே!
நெருப்புக்குக்கூட
இளகின மனசு.
உயிர் உள்ள காதல்களும்
உயிர் தப்ப எண்ணி
ஓய்வெடுத்ததுவும்
அந்த நாட்களில்
இந்த மனிதர்களில்தான்.

உதிர்ந்த ரோஜா இதழ்களும்
உடைந்த எலும்புகளும்
உறவு கொண்டாடியதும்
நாங்கள் கண்டதுதான்.

எம் பிஞ்சுக்குழந்தைகளின்
செல்ல மொழி கேட்ட

செவிப்பறை மேளங்கள்
செல்லடியால் சிதைவு கண்டு
ஐம்புலன்களை அடகு வைத்து
மௌன ஊர்வலத்திற்கு
மரியாதை செய்தன.

நீண்ட பாதையின்
உச்சிவரை
நெருப்புடன்
பழகிய
உடல்கள்தான் எத்தனை?

உச்சி வெயிலில்
ஒவ்வொருநாளும்
மணிக்கணக்காய்
எங்கள் பிஞ்சுகள்கூட
பால்மா கேட்டு
பாதையில் நின்றதை
மறந்தா போய் விட்டீர்?

விடியலைத் தேடிய
வெண்பனிப்பூக்கள்
விடியுமுன்னமே
விண்சென்ற கதைகள்
ஒட்டியுள்ளன வரலாறுகளாய்.

அயல்வீட்டுச்சேவல்கள்
அடிக்கடிகூவி
விடியலைக்கேட்டன.
இரவு முடிவதற்குள்
இந்தச் சேவல்களை
இரையாக்கிவிட்ட...
எட்டப்பர்களும்
நம் உறவுகள்தானே!

பொழுதுதான் இன்னும்
புலர்ந்தபாடில்லை.
புண்பட்ட மனதில்
இந்த உறவுகளை
எப்படிப் பார்ப்பது?



சிதறுண்ட சீக்கியனின்
உடல்களைத் தேடிச்சென்று
தலைப்பாகை குலைத்து
கத்திகளைக் காவிச்சென்ற
கல் நெஞ்சக் காரர்களும்
நம்மவரே!

இறப்புக்கு நிட்சயதார்த்தம்
இன்னும் சில நிமிடங்களில் .....
இப்படியிருக்கையிலும்
நம்மவர்கள்
அயல்வீட்டு "அன்ரனா" முதல்
கம்பஸின் "கொம்பியூட்டர்" வரை
பாதுகாப்பாகக் காவிச்சென்றதை
நாங்கள் பார்க்கத்தவறியதில்லை.

வசந்தத்தின் முகவரியில்
வாழ்ந்து வந்த நாங்கள்
துயரங்களின் துடைப்பங்களாய்
சோகத்தின் விளம்பரங்களாய்
போனதில்
நம்மவரின் மனசுக்கு
ஒன்றும் நட்டமாய்ப் படவில்லை.

சுதந்திரம் கேட்ட
சுலோகஅட்டைகள்
நனைந்து கெட்டதால்

இன்று நமக்குக் கிடைத்தது
அடியும் என்று
அடித்துக்கூறும்
சுதந்திரமே.



இந்த நிலைகெட்ட
மனிதனின்
செயல்கண்டு
நெஞ்சு பொறுக்காத
பாரதி
இன்றிருந்தால்
நெஞ்சு வெடித்திருக்கும்
இங்கு நம்மவரின்
செயல்கண்டு.

பொழுதுதான் இன்னும்
புலர்ந்தில்லை.
புண்பட்ட மனத்திலே.
சுதந்திரமே!
உன் புன்னகையின்
தடங்கள்
மறையாத கனவுகளாய்
இருக்கையில்
மலர்கின்ற என் ஆசைகள்
மௌனத்துள் மறையாது
வேறென்ன செய்வது.

துக்கமேகங்கள் நாளும்
சுகமாக வலம் வந்து வானில்
பக்க தாளங்களோடு
பாடுது ஓர்
சோக ஊர்வலம்.

சூரியனைத்தேடியும்
சந்திரனைப்பாடியும்
சுகம்தேடவந்த
மனித குலம்
மானிடத்தியல்பை மறந்து
மிருகங்களாய் நடக்கின்றன.

இதனால்
இன்னொரு உலகம் படைப்போம்.
அங்கே
நீருக்கும் நெருப்புக்கும்
நிட்சயதார்த்தம் செய்வோம்.
மனிதப்பண்பை
அதன் மண்ணாக்குவோம்.


## தாயகம் கவிதைகள் அறுபத்தாறு

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களது
முதலாம் ஆண்டு நினைவாக
இருபத்தைந்து கவிஞர்களின்
கவிதையாக்கங்கள்

## தேவி எழுந்தாள்

(கவிதைத்தொகுதி)

சி. சிவசேகரம்.

## ஏன் ?

(சிறுகதைத்தொகுதி)

என். எஸ். வாகீசன்

வெளியீடு:
தேசிய கலை இலக்கியப்பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2 வது சந்து
சென்னை - 600 002

கிடைக்கப்பெற்றோம்

# பிரெஞ்சுக்காரருக்கு தமிழ் தெரியுமா ?

பிரான்சில் அகதிகளானதின் பின்னால்த்தான் இலங்கைத் தமிழர்கள் பிரெஞ்சுடனும், பிரெஞ் மொழியுடனும் பரிச்சயம் கொண்டனர்.
ஆனால் பிரெஞ்சுக்காரர் தமிழ் மொழியுடன் கொண்ட பரிச்சயம் முன்னூறு ஆண்டுகட்கும் அதிகமானது. இதனை நாம் அறியாததினால் தான் போலும் மெத்ரோக்களிலும், பஸ்களிலும், பொது இடங்களிலும், பாலியல் இச்சைகளை சொற்களில் வடியவிடும் உல்லாசத்தில் உரத்துக் கதைத்துக்கொள்கிறோம். அறுவை ஜோக்கடித்துச் சிரிக்கிறோம்.
பிரெஞ்சுக்காரர்களுக்கு எங்கே தமிழ் தெரியப் போகின்றது என்ற இவ் எண்ணப்பாட்டை அது தவறென இடித்து மறுக்கின்றது அண்மையில் படித்த ஒரு கட்டுரை.

பழம்பெரும் இலக்கிய இதழான "தாமரை" வெளியிட்ட "புதுவை மதநிலச் சிறப்பு இதழில்" "பிரெஞ்சுக்காரர்களின் தமிழ்த்தொண்டு" எனும் கட்டுரை அரிய பல செய்திகளையும் தகவல்களையும் தெரிவிக்கின்றது.
1673ம் ஆண்டில் இருந்து தமிழ் நாட்டில் உள்ள பாண்டிச்சேரி எனும் புதுச்சேரி பிரெஞ்சுக்காரரின் வாணிபத்தலமாகியது. அத்துடன் காரைக்கால், ஏனாம், மாஹி, சந்திர நாகூர் ஆகிய பகுதிகளும் பிரெஞ்சு ஆளுகைக்கு உட்பட்டு வாணிபத்தலங்களாயின. ஆதலால் அவர்கள் தமிழ் கற்கவும், பேசவும் தேவையானதாகி விட்டது. டாக்டர் இராமதுரை வெங்கட்ராமன் எழுதிய இக்கட்டுரையில் வியப்புறும் தகவல்கள் 'இளக்காரமான' தமிழ் மொழியை பிரெஞ்சுக்காரர் கற்றுக்கொள்ள எடுத்துள்ள பிரயத்தனங்களை வெளிப்படுத்துகின்றன.

பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த பிரெஞ்சு நீதிக்கதை எழுத்தாளர் ல போன்ததேன் (la fontaine ) இந்தியாவைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டு, தன்னுடைய படைப்புக்களில் பில்பாயின் தாக்கம் நிறைய இருக்கிறதென்று அவரே கூறியிருக்கிறார். இந்தியப் படைப்புக்களின் தாக்கம் 19ட் நூற்றாண்டின் பிரெஞ்சு எழுத்தாளரிடம் பெரிதும் காணப்பட்டது. ஷத்தோபிரியான் சாகுந்தலித்தினால் பெரிதும் கவரப்பட்டவர். அதேபோல் விக்தோர் ஹுய்கோவின் கவிதைகளில் உபனிஷத்தின் தாக்கம் தெரிகிறது. ல மார்த்தீன் சமஸ்கிருத கவிதை நாடகங்களை விரும்பிப்படித்ததின் விளைவு அவருடைய படைப்புகளில் தெரிகிறது.

1788ல் புஷே தொப்சோன் வீல் (foucher D'opsonville ) என்பவர் பாகவதம் என்ற நூலை பாரிஸில் வெளியிட்டார். புதுவையைச் சேர்ந்த மரியதாசுப்பிள்ளை என்பவர் இந்த வெளியீட்டுக்குக் காரணமாக இருந்தார். இவர் பிரெஞ்சு இந்தியக் கம்பனியில் துபாஷியாக பணியாற்றிவந்தார். இவர் பாகவதத்தை பிரெஞ்சு மொழியில் எழுதி 1769 ல் பாரிசுக்கு அனுப்பி வைத்தார். இதுவே தமிழாக்கப்பட்டு பாரிசில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

தெலாலான் என்ற பாதிரியார் இங்குள்ளவர்களை மதமாற்றம் செய்வதற்காக தமிழை நன்கு கற்றறிந்தார். 1728 ல் மலபார் என்று அழைக்கப்படும் தமிழைக்கற்க உதவும் இலக்கணப் புத்தகத்தை வெளியிட்டார்.

(grammaire pour apprendre lanque tamoule vulgairement appelee le malabare)

இந்தியக்கருத்துக்கள் வேரூன்ற மொழிபரவ வேண்டுமென்ற அடிப்படையில் பலவித அகராதிகள் வெளியிடப்பட்டன. 1831 ல் 291 பக்கங்கள் கொண்ட பிரெஞ்சு தமிழ் தமிழ் பிரெஞ்சு அகராதி பாரிசில் வெளியிடப்பட்டது. இன்றும் பலராலும் உபயோகிக்கப்படும் அகராதி, மூசே, துப்புய் எழுதிய பிரெஞ்சுத் தமிழ் அகராதி. இது 1855 ல் வெளியிடப்பட்டது. துப்புய் பாதிரியார் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் என்று வெளியிட்டார். பி. லாப், பெஸ்கியின் இலக்கணத்தை சுருக்கி ஒரு சிறிய தமிழ் பிரெஞ்சு இலக்கணப்புத்தகத்தை 1892ல் வெளியிட்டார். மேலும் 1904ல் தமிழ் பிரெஞ்சு சொல்வரிசை என்ற புத்தகத்தை எழுதினார். மார்த்தினே ( Dictionnaire de Prononciation Tamoule Fiquree en Francais) என்ற அகராதியை 1877ல் மூன்று பாகங்களாக வெளியிட்டார். இதில் செந்தமிழ் சொற்களுக்கும், பேச்சுத்தமிழ்ச் சொற்களுக்குமுள்ள வித்தியாசங்களைத் தெரிவித்ததுடன் பிரெஞ்சில் தமிழ் உச்சரிப்பைக்கொடுத்திருப்பது ஒரு சிறந்த அம்சம். பெர்ரோ 1868 ல் வெளியிட்ட புத்தகம் குறுகிய காலத்தில் தமிழ் பிரெஞ்சு மொழிகளைக் கற்பது எப்படி என்பது பற்றி ஜெ. பொலேஸ் (j. bolez) "இந்தியாவில் இருபது ஆண்டுகள் " என்ற நூலும் பல மொழி பெயர்ப்பு நூல்களும் வெளியிட்டதோடல்லாமல் 1915 ல் "la meteode de tamoule vulqaire " என்ற பேச்சுத்தமிழைக்கற்கும் முறையைப் பற்றிய நூலை அச்சிட்டது குறிப்பிடத்தக்கது.

மேலேஸ் பல்வேறு தென்னிந்திய நாட்டுப் பாடல்களைச் சேகரித்து 1867 ல் "Poesie Populaires du sud de l'Inde, ' 1868 ல் Chants Populaires de sud de l'Inde "
என்று வெளியிட்டார். அவர் " திருவரங்க கலம்பகம்", " தேவதாசிப் பாட்டு ", "தெருப்பாட்டு " போன்றவைகளை பிரெஞ்சில் மொழி பெயர்ப்புச் செய்தார்.

முய்லியோன் வேன்சான் பிரெஞ்சு பெற்றோர்களுக்குக் காரையில் பிறந்ததினாலோ என்னவோ, அவரின் தமிழ் ஆர்வம் அளப்பிற்கரியது. அவர் 1879 லிருந்து 1921 வரை பாரிசிலுள்ள " ecole nationale des langes orintales " என்ற அமைப்பில் தமிழும் ஹிந்துஸ்தானியையும், போதித்து

வந்தார். கபிலர் அகவல், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற நூல்களை பிரெஞ்சில் மொழி பெயர்த்தார்.

உலக மகா யுத்தத்தின்போது தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்காமல்ப் போய், தங்கள் தமிழ்ப்படிப்பைத் தொடரமுடியாமல் போய் விடக்கூடு மென்ற நல்லெண்ணத்தில் " introduction an tamoule "என்ற ஒரு நல்ல புத்தகத்தை பியேர் மேயில் என்ற அறிஞர் 1954ல் பாரிசில் வெளியிட்டார். 224 பக்கங்கள் கொண்ட இந்தப்புத்தகத்தில் நிறைய இலக்கணக் குறிப்புக் கள், தமிழில் பாடங்கள் அதன் பிரெஞ்சு, ஆங்கில மொழிபெயர்ப்பு, அதுவரை வெளி வந்த அகராதிகள், இலக்கணப்புத்தகங்கள், பத்திரிக்கை கள், தமிழ் சினிமாக் கம்பனிகள் பட்டியல்கள் போன்றவைகளும் கொடுத் திருக்கிறார்.

1977 ஆம் ஆண்டு முதல் பாரிசின் சொர்போன் பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் பிரான்சுவா குரோவாரம் ஒரு முறை நடத்தும் வகுப்பிற்கு பண்டய தமிழ் இலக்கியங்களை மட்டிலும் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளாமல், தற்போதய தமிழ் இலக்கியங்கள் பற்றியும் முனை வர் குரோ தன்னுடைய வகுப்பில் தெளிவாகக்கூறுவதால், பிரெஞ்சு மாணவர்களுக்கு புதுமைப்பித்தன், கி. வா. ஜா, தி. ஜானகிராமன், ஜெயகாந்தன், புதுக்கவிதை எழுத்தாளர்கள் போன்றவர்களைத் தெரிந்து கொள்ள இது ஒரு பெரிய சந்தர்பமாக இருக்கிறது.

"presses orienyaistes de france "என்ற பதிப்பகத்தின் வாயிலாக திரு. சுந்தரராமஸ்வாமியின் " ஜெ. ஜெ. சில குறிப்புகள் மற்றும் திருக்குறளின்" காமத்துப்பால் " இரண்டையும் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளியிடவிருக்கிறார். இவரிடம் பயிற்சி பெற்ற பிரெஞ்சு இளைஞர்கள் தமிழ் இலக்கிய மொழியியல் ஆராய்சியில் ஈடுபட்டிருப்பது மனதிற்கு பெரிதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

எலிசபெத், பர்னு என்னும் பெண், தமிழ் தெலுங்கு, ஹிந்தி, சமஸ்கி ருதம், போன்ற பல இந்திய மொழிகளில் ஆர்வமுள்ளவர். இவர் தமிழ் ஆசிரியையாக பாரிஸ் பல்கலைக் கழகத்தில் வேலை செய்வதுடன், தேவாரம், தமிழ் சங்கீதம் முதலியவற்றில் ஆராய்ச்சி செய்துவருகிறார். இவர்களுக்கு மாத்திரமல்லவாமல், பாரிஸ் பல்கலைக்கழகங்களில் பேராசி ரியராக இருக்கும் முனைவர் அப்பாசாமி முருகையன், முடியப்பநாதன் போன்ற தமிழ் இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கும் பேராசிரியர் பிரான்சுவா குரோவின் பணி என்றும் போற்றத்தக்கது.

இக்கட்டுரையைப் படித்து முடித்தபோது மனதில் சற்று அச்சம் பரவியது. என்றைக்காவது ஒரு பிரெஞ்சுக்காரன் வழிமறித்து புதுமைப் பித்தன், ஜெயகாந்தன் சுந்தரராமசாமி பற்றி கேட்கப்போகின்றான் என்ற பயம் தொற்றிக்கொள்ள இனியாவது தமிழில் சிலவற்றைப் படிக்கவேண் டுமே யென்ற அங்கலாய்பாக இருந்தது.

தொகுப்பு: ஆர். தேவகுமார்.

# க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

தமிழ் – தமிழ் – ஆங்கிலம்

- தற்காலத் தமிழுக்கென்றே உருவாக்கப்பட்ட முதல் அகராதி இது.
- தற்காலத் தமிழில் சொல்லிலும் பொருளிலும் நிகழ்ந்துவரும் மாற்றங்களை எடுத்துக்காட்டும் முதல் அகராதி.
- தற்காலத் தமிழில் உள்ள சொற்களை எடுத்துக்காட்டு வாக்கியங்களோடு விளக்கும் முதல் அகராதி.
- தற்காலத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல் / விளக்கம் தந்திருக்கும் முதல் அகராதி.
- தற்கால மொழியியல், அகராதியியல் அறிவையும் தற்காலத் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் முதல் அகராதி.
- இந்திய மொழிகளில் கணிப்பொறியின் உதவியுடன் உருவாக்கப்பட்டிருக்கும் முதல் அகராதி.
- 15875 தலைச்சொற்கள்.
- 23883 எடுத்துக்காட்டு வாக்கியங்கள்/தொடர்கள்.
- பண்பாட்டுத் தொடர்புடைய சொற்களுக்கான 209 படங்கள்.

அளவு 1/8 டெமி    பக்கங்கள் 1016    விலை ரூ.170.00

**க்ரியா**

268, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,

சென்னை-600 014 ☎ 860586

# தமிழ் அகராதி

இந்த ஆண்டின் தொடக்கமே தமிழ் அறிவியற்பரப்புக்கு நல்லவரவு.
ஒருமொழி வெறும் உணர்ச்சிகளால் மாத்திரம் வாழ்ந்துவிட முடியாது. அதன் பரப்புக்கள் விசாலிக்கப்பட்டு சகலதுறைகளிலும் அண்மைக்காலத்தரவுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மொழியியலும் அப்படிப்பட்ட ஒரு துறைதான். அது மேற்கு உலகில் பலபரிமாணங்களைத் தோற்றுவித்துக்கொண்டுள்ள வேளை நாம் இன்னும் கல்லுக்கும் மண்ணுக்கும்முந்தியது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அகராதி என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவது தடித்த அட்டைபோட்ட சின்னத்தலையணையும், வழக்கொழிந்துபோன சொற்களுக்கான விளக்கங்களுமே. அந்தக்கனவுகளையெல்லாம் உடைத்துநிற்கிறது க்ரியாவின் தற்காலத்தமிழ்அகராதி.

அகராதி பற்றி நாம் பெரிதும் கவலைகொள்வதில்லை. ஆங்கிலசொற்களுக்குத்தமிழைக் கண்டுபிடிக்கும் ஒரு கருவியாகவே அது நமக்குப் பயன்படுகின்றது. ஆங்கிலம் போன்றமேலை மொழிகளில் கலை, விஞ்ஞானம், பொருளியல் என பல்வேறுதுறைகளுக்குத்தனித்தனி அகராதிகள் என வளர்ந்துகொண்டிருக்கின்றன. நமக்குக்கிடைப்பதோ "தமிழ் ஆங்கில போதினி" தமிழ் ஆங்கில கையகராதி" .
இந்தமரபை விட்டு நம்மால் நகரவே முடியாதா?

இந்த அவலமான சூழலில், பல்கலைக்கழகங்களும், அரசுதுறை நிறுவனங்களும் மேற்கொள்ளவேண்டிய மிகப்பெரிய பொறுப்பையேற்று "க்ரியா" எமக்கு இந்த அகராதியைத்தந்துள்ளது. வழக்கொழிந்தசொற்களைப் பெரும்பாலும் தவிர்த்து 1956 ம் ஆண்டுக்குப் பிந்திய மூலக்கூறுகளிலிருந்து சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

1956 க்குப் பின்வந்த நாவல்கள், சிறுகதைகள், மற்றும் துறைகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் வசனங்களிலிருந்து 15, 875 தலைச்சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த தலைச்சொற்களை விளக்க 23, 883 எடுத்துக்காட்டு

வாக்கியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை எந்த அகராதியிலும் ஈழத்தில் பாவிக்கப்படும் சொற்கள் சேர்க்கப்பட்டதில்லை. அந்தக்குறையும் இதில் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் பாவிக்கப்படாமல் ஈழத்தில் மாத்திரம் பாவிக்கப்படும் 436 சொற்கள் இதிற்சேர்க்கப்பட்டுள்ளன. ஈழத்தில் பாவிக்கப்படும் சொற்களை அடையாளம் காட்ட அடைப்புக்குறிக்குள் (இல) எனக்குறிக்கப்பட்டுள்ளது.
சொற்களை விளக்க 209 ஓவியங்கள் தரப்பட்டுள்ளது.
அகராதியில் இவ்வளவு அழகிய படங்களா ?
தலைச்சொற்களுக்கான ஆங்கிலச்சொற்கள். பின் அவற்றை விளக்க ஆங்கிலவாக்கியங்கள். ஒவ்வோரு அமைப்பிலும் மிகுந்த கவனம் எடுத்துச்செய்யப்பட்டுள்ளது.

ப. ரா. சுப்பிரமணியனை ஆசிரியராகக்கொண்டு ஒரு அறிஞர் குழுவைத்திரட்டி இவ் அற்புத பணியைச்செய்து முடித்த "க்ரியா" ராமகிருஷ்ணன் என்றும் எம் நினைவுக்குரியவர்.

நாரி (இல) - இடுப்பு - அவன் நாரி முறிய வேலைசெய்தான்.
நாங்கள் - பேசுபவர்கள் முன்இருப்பவரை உள்ப்படுத்தாத தன்மை பன்மைச்சொல்.
(இல) யாழ்ப்பாணத்தில் முன்இருப்பவரையும் உள்ளடக்கிய தன்மை பன்மைச்சொல்.
பெடியன் (இல) - பையன்
கசிப்பு (இல) - கள்ளச்சாராயத்திற்கு இலங்கையில் பாவிக்கும் சொல்.
கொப்பி (இல) - குறிப்பேடு
மேலே தரப்பட்டவை சில எடுத்துக்காட்டுக்களே.

மையடைந்த தடித்தஎழுத்துக்களும், பழுப்புநிறதாளும் நமக்கு நினைவுக்கு வந்தால் அதுதான் அகராதி. இந்தசம்பிரதாயங்களையும் உடைத்து நிற்கிறது இவ் அகராதி.
பளிச்சென்ற வெள்ளைக்காகிதம், கணனிப்பொறி எழுத்துடன் வண்ணக்கலவையுடனான அட்டையும் அகராதிக்கு மேலும் மெருகூட்டுகிறது.

ஆறுவருடங்களுக்குமேலாக தன்நேரம் முழுவதையும் இந்த அகராதியை உருவாக்குவதில் செலவிட்ட ராமகிருஷ்ணன் உண்மையிலே பெரிய மனிதன்தான்.
இருபது வருடங்களுக்குமுன் க்ரியா ராமகிருஷ்ணன் குழுவினர் நடத்திய "கசடதபற" என்றசிறுசஞ்சிகையில் வாசகர்வட்டம் வெளியிட்ட தி. ஜானகிராமனின் " நடந்தாய் வாழி காவேரி " என்ற பயணநூலுக்கு விமர்சனம் எழுதியபோது கடைசிவரியாக " பத்து ரூபாய்க்கு இத்தனை அழகியபுத்தகமா? " என்று எழுதியிருந்தது. இப்போ அதேவரியை நான் இரவல் வாங்கி " 170 ரூபாய்க்கு இப்படியோரு ஆழமான அழகான அகராதியா? தமிழ் மக்கள் கொடுத்துவைத்தவர்கள்தான். " என்கிறேன்.

*து. குலசிங்கம்.*
*புலோலியிலிருந்து.*

# வசந்தகால இலையுதிர்வு

- வாசுதேவன்.

வீட்டில் இருக்க முடியாது "

'பாருக்கு " வந்து நீண்ட நேரமாகிவிட்டது.
நகர்வனவற்றையும், நகராதனவற்றையும் பார்த்துக் கண்கள் சலித்துவிட்ட போதும்
அவற்றை மூடவேண்டும் என்ற எண்ணம் ஏனோ இன்னும் தோன்றவில்லை.

பியர் கிளாசுக்கும் மேசைக்கும் இடையில் அகப்பட்டுத் திணறும் வழிந்தோடிய பியரைப்போன்று மனம் பிசங்குகின்றது.

ஓய்வு நாட்கள் தீவிரமானவை. ஓய்வு என்ற வேடத்திற்குள் உடல் அகப்படும்போது, அதே வேடத்தை மனம் கலைத்துக் கொள்கின்றது.
இனம் புரியாத ஒன்று நேரிடப் போகின்றது என்ற பய உணர்வை மனம் காலையிலேயே படைத்து பின்னர் நாள் முழுவதும் அவ்வுணர்வுடன் விளையாடுகின்றது.

நேரிடப்போவது என்ன?
ஏதோவொன்று.

எதையும் தெளிவாக உணர்த்தாத இந்த மனதில் தேங்கி நிற்பது தான் என்ன?
வெறுப்பு, விருப்பு, ஆசை, தாழ்வுணர்வு, மிகையுணர்வு, தனிமை, பிரிவு, மகிழ்ச்சி, வாடல், தேடல், ஊடல், வலிமை, குற்றம், " இது " எதுவாக இருக்க முடியும்?
தேங்கி நிற்கும் "இது " தெளியாமல் நிரந்தரக் கலக்கத்தில் மட்டும் ஏன் உலைகின்றது?

புரியவில்லை புரியவேயில்லை.

பொருளாதார, உலோகாயுதச் சமநிலையானது தனிமனிதவாழ்வில் ஏற்பட்டு விட்டபோதிலும் உளச்சமநிலை அல்லது அகச்சமநிலை தோன்றுவதற்கான நிபந்தனைகள் கூடிவருவதில்லை என்பது எத்தனை உண்மையானது.
ஏன் இந்த உழற்சி ?

உணர முடியாமை உள்வாங்கும் மூச்சைத் தடை செய்கின்றது. மூச்சடைப்பது போன்ற உணர்வு.

ஜீவனின் சமநிலையைத் தேடும் போராட்டத்தில் ஏன் நிரந்தரத் தோல்வி?
இன்னொரு உலகத்தில் இன்னொருவனாக வாழ்வது போன்ற பிரமை எவ்வாறு என்னுள் நுழைந்தது ? பிரமைக்கும் நிஜத்திற்குமிடையில் யார் எங்கு எல்லை போட்டார்கள் ?

தெய்வமே! நேரிடுவது என்ன ?

வெறுமைக்குள் நிலைத்துவிட்ட பார்வையினை பலவந்தமாய்ப் பிய்த்தெடுத்து வேறுபக்கம் திருப்புகிறேன். சுவரில் ஒரு புகைப்படம். கறுப்பு வெள்ளையில்.
பார்வை அதில் எதையோ தேடுகின்றது. சற்று நிம்மதி. தேடுதலில் மனம் ஈடுபடும்போது ஏற்படும் சுயத்தின் தீவிரம் அதீதமானது. அற்புதமானது.
கறுப்பு வெள்ளை என்ற இரண்டு வர்ணங்கள் ஒரு உருவத்தைப் பிறப்பித்திருக்கின்றது.

பழைய வீடு, பழையமேசை, ஒருபோத்தல், ஒருகிளாஸ், முன்னால் கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு தாடிக்கார மனிதன். அனைத்தும் கறுப்பும் வெள்ளையும். இம்மனிதனின் வதனத்தில் படர்ந்துள்ள கவலையைக்கூட கறுப்பும் வெள்ளையும் தான் காட்டுகின்றது. கறுப்பு சில இடங்களில் அதீதமாகவுள்ளது.
சில இடங்களில் மந்தமாகவுள்ளது, வெள்ளையும் அவ்வாறே. வெள்ளை தீவிரமாக உள்ள இடத்தில் கறுப்பு இல்லை. கறுப்பும் அவ்வாறே. இவையெல்லாம் இணைந்து ஒரு உருவத்தைப் பிறப்பித்திருக்கின்றது.
பிரமை. வெறும் பிரமை.

இல்லை இப்பிரமைதான் பிரமையானது. பார்வையைப் பிடுங்குகிறேன்.
பார்க்காமல் இருப்பதற்கு வழியுண்டா? கண்களை மூடுகிறேன். இருள்.
ஊழியிருள். தோன்றல்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட இருள். இவ்விருளில் எதுவும் இருக்கவில்லை. சூனியம். பின்னர் ஒளி தோன்றியது.
பின்னர்தான் எல்லைதோன்றியது. இருத்தலின் எல்லை. இருத்தல் என்றால்....? இருத்தல் என்றால் எல்லை கொள்வது. காலத்தில். இடத்தில்.

எல்லையும் பிரம்மையானது. ஒளிக்கும் இருளுக்கும் இடையில் ஏற்பட்ட உறவில் தோன்றிய எல்லை தோன்றலைத் தோற்றுவித்தது.
ஒளி, இருள். இன்றேல் எல்லாமே பிரமை.

இல்லை. எதுவுமே பிரம்மையில்லை.

கண்களைத் திறக்கிறேன். கால்கள் விறைத்து விட்டன.
கண்களை மூடினாலும் திறந்தாலும் கலக்கம் ஒன்றுதான். விளக்கம் ஒன்றுதான். கடவுளே எதற்காக இமைகளைப் படைத்தாய்?

விறைத்துப்போன கால்கள் " இருக்கும் " உணர்வையும் இனிவரும் நகர்வையும் அறிவிக்கின்றன. மங்கல் பொழுது. மீண்டும் ஒளி-இருள் பேதம். பூமி சூரியனுக்கு முதுகு காட்டப்போகின்றது.
பூமிக்கு முதுகெது ? முகமெது ?

நகர்கிறேன்.

" லா சப்பேல் ".
கால்களின் விறைப்பு மறைந்து விட்டது. பிரம்மையும் கூடவா ?
எங்கேயோ பார்த்த இருமுகங்கள் வீதியோரத்தில்.

" எரிந்து போன வீட்டின் கூரை

பனையோலையால் வேயப்பட்டிருந் ததா? தென்னோலையால் வேயப் பட்டிருந்ததா? என்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்."
எத்தனை புத்திசாலிகள் இவர்கள் என்று கருதுவது எனது அப்பாவித் தனமா ?

வந்தவர்கள் போகிறார்கள். புதிய வர்கள் வருகிறார்கள். பின்னர் இவர்கள் போய்விடுவார்கள். போகின்றவர்களின் கைகளில் பத் திரிகைகள். மடிந்துள்ள நிலையி லேயே ஊகித்தறியக்கூடிய தலை யங்கங்கள் கொண்ட பத்திரிகை கள்.
இருளையும் ஒளியையும் போன்று. கறுப்பையும் வெள்ளையையும் போன்று சாதனை -வேதனை பேதம் காட்டும் தலையங்கங்கள்.

வேதனையுடன் ஒப்பிடும்போது சாதனைமட்டும் அதீதமாக்கப்பட் டதேன் ?
ஒரு புதிய உருவகத்திற்காகவா ?
நகர்கிறேன்.
ஏதோ நேரிடப்போகின்றது.
நடப்பது நடக்கட்டும் என்று ஏன் அமைதியடைய முடியாமலுள்ளது ?
அசாத்தியங்களின் பின்னால் அலைபவர்களுக்கு இவ்வித ஆத்ம உபாதை தோன்றுவதில்லையா ?
உண்மை. குழந்தை தான் குழந் தையென்ற உணர்வற்றதால்தான் குழந்தையாகவுள்ளது. மரம். தான் மரம் என்றுணர்ந்திருந்தால் அது மனிதனாகிவிட்டிருக்கும்.
இது உணர்வில் தோன்றும் பேதம். மனித - இயற்கை உறவில் தோன் றும் பேதம்.

தான் மனிதன் என்று பிரஞ்ஞை கொண்டால் மட்டும் தான், மனி தன் மனிதனாகவுள்ளானா ?
பதிலையிழந்த கேள்விகள். சுற்றி வர, பொருட்களை இழந்த சொற் கள். சொற்களையிழந்த பொருட் கள். பொருட்களுக்குப் பதிலளிக் கும் பொருட்கள்.

சொற்கள் வெறுமையாகின்றன. பொருட்கள் பேசுகின்றன. இதையு ணர்ந்து கேட்கும் மனிதனுக்கு மௌனம் தண்டனைளாக வழங்கப் படுகின்றது.

பொழுது மங்கி விட்டது . தொலை வில் ஓர் உருவம். உணர்வில் ஓர் புலப்பாடு. இயற்கை இருளும் செயற்கை ஒளியும் போடும் எல்லை.
அவர் தான் வருகிறார்.
கண்ணாடி. கருமை வெண்மைச் சிகைப்படலம்.

அவரே தான். அறிஞர்.
வழமையான வணக்கங்கள். என் னுடையது எதேச்சையானது.
தற்போது என்ன நடக்கிறது ?
கேள்வி புரியவில்லை
ஏதாவது "ஆக்கம்"எழுதுகிறீர்களா ?
அழிவை வர்ணிப்பதற்கு எழுதுப வையெல்லாம் " ஆக்கமென்று " ஆகிவிட்ட காலம், கேள்வி புரிந்து விட்டது. என்னிடம் பதிலில்லை.
சிரிக்கிறார். அவரது சிரிப்பு தண லைச் சிறைப்பிடித்த குளிர்நீர்க் கட்டி.
மனிதத்திற்காகப் பயன்படவேண் டும் தம்பி. . . . . ?
இதுவும் புரியவில்லை.
ஏதோ நேரிடப்போகின்றது. எனக் குச் சிரிப்பு வருகின்றது.
மனிதம். மானிடவாதிகளில்தான் எத்தனை வகை !
மனிதனிடம் அறியாமை குடிகொ ண்டுள்ளது. அதன் காரணமாகவே அவன் தீமை செய்கின்றான். சகித் துக்கொள். அவனுக்கு அறிவைப் புகட்டு இல்லையில்லை மனிதனி டத்திலே நெல்லுமுண்டு புல்லுமு ண்டு புல்லையகற்று நெல்லைப் பயிர் செய்.
தவறு. மனிதர்களுக்கெல்லாம் மாக்ஸீயம் புகட்டு, பாட்டாளிக்குச் சர்வாதிகாரம் கொடு.
இஃதொன்றுமில்லை அயலவனை யும் உன்னைப்போன்று நேசி.

மானிடவாதிகள்! கடவுளே, மானிடவாதிகளின் மத்தியில் மட்டும் எத்தனை பிரிவு எத்தனை பிளவு ஒவ்வொரு வகையான மானிடவாதியும் மற்றவகையான மானிடவாதியை பரம எதிரியைப் போன்று வெறுக்கிறான்.
அவனுக்கெதிராக எல்லாவகையான யுத்தத்தையும் தொடுக்கிறான்.
எவ்வாறோ மனிதர்களின் அழிவிற்கு மானிடவாதியே காரணமாகிறான்.
நிஜமாக ஆராய்ந்து பார்த்தால், மானிடத்தை நேசிப்பதாக எண்ணும் இம்மானிடவாதிகளிடத்தில் நிறைந்திருப்பது மானிட நேயமல்ல சுயநேயம். இம்மானிடவாதிகளெல்லாம் சுயவாதிகள்.

என்ன எதற்கும் பதிலின்றி யோசிக்கிறீர்கள் ?
பெரியவரே ! பதிலைப் புரிந்து கொள்வதற்கு பொருட்கள் பேசுவதைக் கேளுங்கள். மனிதனிடம் மொழிகள் உண்டு. செய்திகள் இல்லை. மனிதன் வாழ்க்கையல்ல. வாழ்க்கை காவி. எலும்பினாலும் சதையினாலும் ஆக்கிய பாத்திரத்தில் வாழ்க்கையைக் காவிக்கொண்டு செல்லும் வெறுமை. நீங்களும் நானும் சிதறுண்ட வாழ்க்கைப் பிரபஞ்சத்தின் சிறுதுகள்களைக் காவுகிறோம். எங்கிருந்து எதை எங்கே கொண்டு போகிறோம் என்று புரியாமல், பரம்பரை பரம்பரையாக எதையோ காவுகிறோம்.
என்னை அடக்கிக்கொண்டேன்.
ஏதோ நேரிடப்போகின்றது.
வயிற்றைக் குமட்டிக் கொண்டு வாந்தி வருகின்றது.
தம்பி உங்களிடம் நிறைந்த மனித நேய உணர்வுண்டு நீங்கள் ஓர் நல்ல மானிடவாதி.

கடவுளே, எதற்கிந்த "லேபிள்" இல்லை நான் மானிடவாதியில்லை. என்னிடம் சுயநலத்தைத் தவிர வேறொன்றுமில்லை. விட்டுவிடுங்கள்.
நான் யாருமில்லை, ஊருமில்லை, பேருமில்லை, கட்சியுமில்லை, கொடியுமில்லை.
நான் என்னைப்போன்று என் அயலவனை நேசிப்பதில்லை.
அயலவனை ஆகக்குறைந்தது அயலவனாகவாவது நேசிக்க முற்படுகிறேன். புல்லை வெட்டவுமில்லை, நெல்லை விதைக்கவுமில்லை. புல்லிடம் புன்மை நிறைந்துள்ளதென்றோ, நெல்லிடம் ஜீவனம் நிறைந்திருக்கின்றதென்றோ வாதம் செய்யவும் வரவில்லை.
எனக்குப் பாட்டாளியுமில்லை கூட்டாளியுமில்லை.
இலையுதிர்கால மாலைப்பொழுதுகளின் இருண்ட புகார்களுக்குள் என்னை நான் தேடுகிறேன்.
எனது அக அலறலை வலிந்திழுத்த போலிச் சிரிப்பால் சிதைக்கிறேன்.
அவரும் சிரிக்கிறார்.

என்ன தம்பி ஒரு மாதிரி இருக்கிறீர்கள் ?
வயிற்றைக் குமட்டுகின்றது. வாந்தியெடுக்கவேண்டும் போலுள்ளது.
கடவுளே, கண்டவற்றையும், கேட்டவற்றையும், கிரகித்தவற்றையும் எவ்வாறு வாந்தியெடுக்கமுடியும் ?
குமட்டல் குடலிலிருந்து வரவில்லை.
தண்டனை நிரந்தரமாகிவிட்டது.

தம்பி, அடுத்தவாரம் என்னுடைய புதிய நாவல் ஒன்றை வெளியிடுகிறேன். கட்டாயமாக வாருங்கள்.

நன்றிகூறி நகர்கிறேன். விடியலுக்குப்பின் வெளிச்சம் வராவிட்டால் இருள் நிரந்தரமாகிவிடும். சூரியனின்றிப் பொழுது விடிந்தால் என்ன செய்வது ?

ஏதோவொன்று நேரிடப்போகின்றது. புரியவில்லை.

இரவு ' பஸ் ' ஒன்றுக்குள் ஏறுகிறேன். பின் நான் நகரவில்லை.
எல்லாமே நகருகின்றது. கட்டடங்கள், வாகனங்கள், மரங்கள் மனிதர்கள், வெளிச்சங்கள். மீண்

டும் இருள் - வெளிச்ச பேதம்.
தலையைச்சுற்றுகிறது.

திடீரென எல்லாமே ஸ்தம்பிக்கிறது. ஏதோ நேரிடப்போகிறது.
நான் நகர்கிறேன்.
இருண்ட வீதி நுழைகிறேன் திடீர் வெளிச்சம் உயர்ந்த கட்டடம்.
ஒன்றுமே புரியவில்லை.

உருவங்களின் நகர்வுகள் நீண்ட நிழல்கள். ஆம், நிழல்கள்.
இருளின் அதீதமும், மந்தமும், வெளிச்சமும் கொண்ட வடிவங்கள். சோடியாக, தனியாக, துல்லியமான நகர்வுகள்.

கட்டடத்தின் வாசலில் ஒளியூட்டப்பட்ட ஒரு பலகை. எழுத்துக் கோர்வை.

" பைத்தியங்கள் கூடுமிடம் அறிவிருந்தால் நுழைவாயிலில் அடைமானம் கொடுத்துவிட்டு நுழைக "

உள்ளே நுழைகிறேன்.
ஏதோ நேரிடப்போகின்றது.

- முற்றும் -

## கொண்டாட்டங்களும் அன்பளிப்புக்களும்.

பாரிசில், பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா(?) போன்ற கொண்டாட்டங்களுக்குப் போயிருப்பீர்கள் !

அங்கு 'அன்பளிப்புகள் ' பொருட்களாகவோ அல்லது 'என்வலப்புக்களாகவோ' கொடுத்து உரியவர்களை வாழ்த்துவதையும்(?) அதை வீடியோ வடிவாகப் பதிவு செய்வதையும் பார்த்திருப்பீர்கள். இல்லையா!

இப்போதெல்லாம் கொண்டாட்டங்களில் வெறுமையான 'என்வலப்பு'களும் கொடுக்கப்படுகின்றனவாம் !
கேள்விப்பட்டீர்களா? கேள்விப்படுங்கள்!

'ஒரு மாதத்தில நாலு, சிலவேளை ஒரு நாளைக்கே நாலு கொண்டாட்டம்! மாதச்சம்பளத்தில நாலிலொண்டை என்னால இழக்கேலாதப்பா' என்றார் நண்பரொருவர்.

'இதெல்லாம் தேவையா நாட்டுக்கு!

சௌமி

# மாண்புமிகு நாய்

- சோலைக்கிளி.

மனிதர்களோடு உறவு வைத்துக்கொள்வதைவிட மிருகங்களோடு நட்புறவு வைத்துக்கொள்ளுவது இப்போதெல்லாம் மேலாகப் படுகிறது. மிருகத்திற்கு முன்னொன்று பின்னொன்று பேசத்தெரியாது. வஞ்சகத்தை மனதில் வைத்துக்கொண்டு சிரிக்கவும் மாட்டாது.

சும்மா, மலம் கழிக்கும். அதை கிளறிப்பார்க்காது. சம்பளம் எவ்வளவு என்று சனத்துக்குள் கேட்காது. அவனது பெண்டாட்டிக்கும் இவனுக்கும் உறவு என்று எவனையோ காட்டி பகிரங்கமாக கதைத்து ஒரு பெண்ணைக் கொச்சைப்படுத்தாது.
அழகாக வாலை ஆட்டும். ஆறுதலாக காற்றுவாங்கும். மலங்கழுவி, அசிங்கங்களை சுத்தம் செய்து தூய்மையானவனாக தன்னை எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன்.
ஆனால் எனது பார்வையில் வரவர அவன் அசிங்கமானவனாகவே தெரிகிறான்.

ஆள்வைத்து ஒருவனை ஒருவன் கொல்லுகிறான். குறைந்தது கொல்லுவேன் என்றாவது சொல்லுகிறான். சந்தர்ப்பத்திற்கு நடிக்கிறான். தன் காரியம் ஆகுமட்டும் சிரிக்கிறான். நாயின் காலைப்பிடித்தாவது நம் காரியம் முடிக்கவேண்டும் என்று வெட்கமில்லாமல் கூறிக்கொள்கிறான்.

நானும் மனிதன்தான். எனக்கு என்னவோ தெரியாது மனிதர்களை, மேற் சொன்னவாறு வரவர, கசப்புக்கூடி பிடிக்காத தனம் பெருக்கிறது.

நானும் எனது நண்பனும் தேநீர் அருந்தும்போது இவன் ஏன் இடையில் நுழையவேண்டும்? நுழைந்தாலும் காரியமில்லை, ஏன் அரசியல் கதைக்க வேண்டும்?
அயோக்கியன்!

எவனுக்கோ பெட்டிசம் அடித்ததை பெருமையாகக் கூறி மகிழ்கிறான்.

றாஸ்கல்!

நான் ஊர்விட்டு ஊர் தொழில் செய்பவன். என் போக்கிரித்தனம் இன்னும் என் சொந்த ஊருக்கு மாறிவருவதற்கு எவனின் காலிலாவது விழுந்து முயற்சி எடுக்கவில்லை. (நான் மனிதனையே மதிக்கவில்லை, அவனின் காலை மதிப்பேனா!)

" பஸ் " சுக்காகக் காத்து நின்று என் வாழ்க்கையின் முக்கால் பாகத்தை இழந்தவன். நான் நிற்கும் இடத்தில் ஒரு நாய் படுக்கும். அதற்கும் எனக்கும் மிகச்சினேகம். அதை மொய்க்கும் கொசுவாக நான் மாறமாட்டேனா என ஏங்கியதுண்டு. வயது போனதுதான், ஆனாலும் ஆரோக்கியமானது. மனித னைப்போன்று உத்தியோக வெறி அதற்கில்லை. அதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு அன்புடன் சாதுவாக அந்தக் கடைவாசலை காவல் செய்கிறது. நான் இடைக்கிடை அதைப்பார்த்துப் புன்னகைப்பேன். அதுவும் மெல்லிய தாய் கண்ணடிக்கும்.

நீ திருமணமாகி விட்டாயா? என்று அது ஒருநாளும் என்னைக் கேட்டதில்லை.

யோக்கியன்!

இல்லையென்று அறிந்திருந்தால், எப்போது? ஒன்று பார்க்கட்டுமா? என்றாவது அது வினவவில்லை.

மிக யோக்கியன்!

"எனது ஊரில்தான் நீ திருமணம் செய்யவேண்டும், இல்லையென்றால் உன்னை வஞ்சிப்பேன்" என்று சொல்லி தொழில் ரீதியான தொல்லைகளை அது எனக்கு ஒரு நாளும் கொடுக்கவுமில்லை.
மிகமிக பெரிய யோக்கியன்.

அழகாகக் கொட்டாவி விடும். வாகனம் வந்தால் என்னைப் பார்த்துச் சிரிக்கும்.

பாவம், நீ போ என்று அன்புடன் என்னை வழியனுப்பும்.

ஒரு நாள் என் மனத்துயரத்தை அதனிடம் பகிர்ந்தேன். வாகனத்திற்கா கக் காத்துநின்று, காத்து நின்று அலுத்த துயரத்தின் உணர்வை அதனுடன் சம்பாசித்தேன். கேட்டுச் சலித்து " அதோ மனிதன் வருகிறான் புறமுதுகைக் காட்டிநில்" என்று என்னை மிக ஆழமாகக் புரிந்து கொண்டதுபோல் சைகை செய்தது. ஒரு கவிதை அதற்கு எழுதினால் என்ன குறைந்தா போகும்? நான் அந்த மாண்புமிகு நாயுடன் சம்பாசித்ததை ஒரு கவிதையாக்கி பிரசுரித்திருக்கி றேன். மாண்புமிகு மனிதர்கள் மட்டும் படிப்பதற்கு.

அது சரி, இன்னொரு துக்கமான விடயம் இப்போது என் நினைவுக்கு வருகிறது. எங்கள் வீட்டில் ஒரு ஆட்டுக்குட்டி இருந்தது. சிலர் சிரிப்பதைப் போன்று தொனி அது கத்தினால் எனக்குக் கேட்கும். வஞ்சகம் நிறைந்த சில மனிதர்களின் முகத்தைவிட அதன் முகம் லட்சணமாக இருக்கும். நான் காதலித்த பெண்ணின் தோலைவிட அதன் தோல் வெள்ளை. ஆனால், அவளுக்கிருந்த குழந்தையுள்ளம் அதற்கும் இருந்தது. அதனால் நான் அதை மிகவும் நேசித்தேன். அதைப்பற்றி ஒரு கவிதைபாடி அதன் கழுத்தில் கட்டிவிடவேண்டும் என்றும் ஆவல் கொண்டிருந்தேன்.

இருந்தும் நான் நினைத்தது நடக்கவில்லை. நான் நினைத்த எதுவுமே

நடப்பது அரிது. கணக்காளனாகவேண்டுமென்று நினைதிதுப் படித்து கவிஞனாகினேன். கவிஞனாகவேண்டும் என்று நினைத்துப் படித்திருந்தால் ஒரு வேளை கணக்காளனாகியிருப்பேனோ என்னவோ தெரியாது! ஆனாலும் கவிஞனாக வாழ்வதுதான் இப்போது எனக்குப் பிடிக்கிறது. காரணம், நான் ஆட்டைப்பற்றி கவிதை எழுதுகிறேன். அவளைப்பற்றிக் கவிதை எழுதுகிறேன். சில வேளைகளல் கவிதையைப்பற்றியே கவிதை எழுதுகிறேன்.

கவிதை, "ஆறு " என்கிறேன். அது ஒரு ஊற்று என்கிறேன். கவிஞன் தனம் முற்றி "கவிதை ஒரு கடல் " என்றும் கூறிவிட்டேன். பாவம் ! கவிப்பிரவாகங்களுக்கு இனிக்கவிதையை வர்ணிக்க வழியேயில்லை. இந்த உலகமே ஒரு கவிதைதான் என்றும் விரைவில் கூறிவிட வேண்டும் அவர்கள் குறிப்பிடுவதற்குள். ( அவர்கள் " கவிதை என்பது கடவுள் " என்று குறிப்பிட மாட்டார்கள். அந்த நம்பிக்கையில் அதை நான் இன்னும் எழுதவில்லை. )
மெய்தான், திடீரென எங்கள் வீட்டு ஆடு , அதாவது நான் நேசித்த அந்த, எனது காதலியைவிட வெள்ளையான எனது, ஆட்டுக்குட்டி ஒரு ஊமையிரவில் செத்துவிட்டது. இன்றய மனிதர்களின் சாவைப் போன்று அல்ல, மிகப் பெறுமதியாக அது எனக்குப்பட்டது.

அழுதேன். அவளது காதலை இழந்த தினத்தைவிட. அன்று இரவு என் காலின் பெருவிரலும் கண்ணீர் விட்டது. சிறுநீர் வரவில்லை. எல்லாம் அழுகையாகவே கழிந்தது. உடனே கவிதை எழுந்தது. அது எப்போதுமே மிக இக்கட்டான நேரங்களில்தான் வரும். கோழி உணர்சியைப் போன்றும், நாயின் உணர்சியைப்போன்றும், சந்தர்ப்ப சூழல் தெரியாமல்தான் எனக்குக்கவிதைகள் வரும். ஒரு நாள் தொழிலுக்குப்போகும்போது கவிதை வரத்தொடங்கிவிட்டது. இறங்கும் இடத்தை மறந்து வாகனம் போய் முடிந்த இடத்தில் இறங்கி வெட்கப்பட்டேன்.


அந்த இரவில் அந்தக் குளிரில் அந்தத்துக்கமான தருணத்தில், வந்த கவிதைதான் இதில் உள்ள "ஆட்டுக்குட்டிக்கு அஞ்சலி ".
நான் மனிதர்களுக்கு அஞ்சலிக்கவிதை இதுவரை எழுதியதில்லை. அதற்கு இங்கு எத்தனையோ கவிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதைக் கவனித்துக்கொள்வார்கள். அவர்களிடம் காரியாலயப் படிவங்களைப் போன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கவிதைகள் உள்ளன. இறந்தவரின் பெயரை மட்டும் இடைவெளியில் நிரப்பி பிரசுரித்து பெயர் வாங்கிக்கொள்ள வார்கள்.

எனக்குப்பட்டம் தர உங்களுக்கு விருப்பமென்றால், " பட்டம்" என்று சிறுவர்கள் குறிப்பிடும் ஒரு "காற்றாடி " தாருங்கள் . ஓய்வான நேரங்களில் கடற்கரையில் விட்டு விளையாடிக் கொள்கிறேன். அது போதும்.

இருப்பு

374, செயிலோன் வீதி,
கல்முனை - 04, இலங்கை.

# கி.பி. அரவிந்தன் கவிதைகள்.




## வெளிக்கிட்டாயிற்று

நில் என்பார் எவருமிலர்.
செல் என்கிறது காற்றும்
முகத்திலடித்தபடி...

பனங்கருக்குச் சிராய்ப்பினால்
காய்ச்சுப்போன
நெஞ்சாங்குழி.
நெஞ்சுக்குள் சரசரக்கும்
பனை மரவெளி.

பனந்தோப்பில் பழம்பொறுக்கி
சூப்பி எறிந்த பனங்கொட்டை.
நிலத்தடி நீர் உறிஞ்சி
நிமிரும் பனை.
வேரோடிப்பிளக்கும்
சுண்ணக்கற்பாறை.

வாழ்வுக்குள் ஒன்றித்து
ஓர்மத்தை விளைவித்து
கிளைவிட்ட நீட்சியில்
ஓங்கும் பனை.
பனை ஈனும் வடலிகள்.

வடலி வளர்த்தா இனி
கள் குடிக்கப்போகின்றீர் ?
எத்துணை இளக்காரம்
மண்உரம் அறியா மூடர்.

ஏதறிவார் இவர் !
கதிகாலை நகர்த்திநட்டு
வளைவு வளைத்த
பாரம்பரியம் தவிர...

பனையைத்தான் அறியார்
பனைபோலாயினும்,
அதில் பாதியாய்
பாதியில் பாதியாய் தன்னும்
எக்குணங்குறியும்
இல்லாமலே இதுகள்.

சிங்காசனம் இல்லையேல்
அசோகச்சக்கர நாற்காலியென
விலாங்காய், ஓடுகாலியாய்
தலைகால் புரியாத
அதிகாரப்பசியில்
அம்மணமாய், ஆபாசமாய்
எப்படி விளைந்தன
இவ்வகைப்பிறவிகள்.

என்னையே என்னிலிருந்து
திறக்கச்செய்கிறது பார்.
எடுப்பார் கைப்பிள்ளையாகும்
இவர்களின் சகவாசம்.

புதுப்பாளைக் கள்ளும்,
குரும்பை இளநுங்கும்,
கவோலை உதிர
சிரிக்கும் குருத்தோலையும்,
பனம்பழம் விழும்காலை
பழம்தின்ற காற்றும்,
நுகராத நானும். . .

எல்லாமும் இருக்கட்டும்
நீ போய் விடு
தனியனாய் நிற்காதே !
உறவுதான் துரத்துகின்றது.

நகராதாம் கால்
மரத்துப்போய்.
எதற்காம் இப்பின்வாங்கல்
நடந்தகளை ஆறாமல். . .

கைகாலில் முள்கீறி
கசிகிறது இரத்தம்.
செல்லமாய்த்தான்

பின்னே,
யாருக்காம் பழம்சிந்தும்
இலந்தைவிழா
எனக்காய்தானே.

காய்க்கொத்தாய் நாயுண்ணி,
குலை தள்ளும் ஈச்சைமரம்,
பூச்சுருங்கா தொட்டச்சிணுங்கி,
எல்லாவற்றிலும் முள்ளுத்தான்
முள்ளுப்பற்றைக்காடுதான்
பனந்தோப்பு.

பட்பனை சாயக்கூட
நாளெடுக்கும்
வட்டுக்குள் பச்சைக்கிளி
கூடுகட்டும்
செண்பகக் கூவலுக்கு
மைனாக்கள் பதிலிறுக்கும்
அணிற்பிள்ளைத் துள்ளலுக்கு
கோட்டான்கள் தாளமிடும்.

தாளகதி மங்கிமங்கி
பனந்தோப்பும் எனை நீங்கி
ஏழ்பனை நிலத்திருந்த
பனை.
யார் வளர்த்தார்
வழிவழியாய். . .

பனங்கொட்டை
எல்லாமா
ஊமல்கள் ஆகிவிடும் !
கிழங்கிடும் !

சக்கரங்கள் எனைக்காவி
வெளிநோக்கி
வெளிநோக்கி
தள்ளுகின்றது.
ஆணிவேர்
பின்னிழுத்து
பின்னிழுத்து
வீழ்த்துகின்றது
புழுதி மண்ணில். .

○

## போ, அங்கிரு !

தற்செயல்

எனத்தான் சொல்வேன்.
நிலாவைப் பார்த்தேன்.

மதியவெயிலில்
ஓடோடி வந்து
பாடசாலை
சுவரொதுக்கில்
வாடி நிற்கும்
தாயின் முகம்
நிலவில்.

கட்டிடப்புதரிடை
மீண்ட
களையுடன்...

சின்னக்குழந்தை
கரையெல்லாம் பிய்த்த
பாலப்பமாய்,
முக்காலளவினதாய்,
முழு நிலவா இப்படி ?

பௌர்ணமிக்கு
முன் நிலவாம்

சோடியம் நியான்
வெளிச்ச வீச்சுள்
மங்கலாகி
சோபை இழந்த
வெண்ணெழி

எட்டாம் மாடி
என் ஜன்னலாலும்
எட்டமாட்டா
பலவீனத்தில்
ஒளிக்கற்றைகள்.

நிலவின் குறுக்காய்
கட்டிடத்தை
அடுக்கி நிமிர்த்தும்
இராட்சதக்கை
இரும்பு கிரேன்
ஜடம்.

வார இறுதிநாள்
மகிழ்வாய்
கழியுமென்றால்
இந்த நிலவேன்
கண்ணில்பட்டது !

ஐயகோ...!
நிலவின் களையுமா
கொள்ளை போயிற்று ?
மூன்றாம் உலகம் போல்..

இந்த களை இழந்த
நிலவு
எதிலெல்லாம்
தென்படுமோ
வரும் கிழமை முழுதும் !

எந்தன் ஊரினிலும்
தென்படுமே
இந்நிலவு
என்னழகு!

பௌர்ணமிகள்
குருதி பட்டு
குழிக்குள் ஒடுங்கும்
துயர்வாய் படுமுன்னம்.

பனங்காட்டிடை
ஊடி, உரசியும்
தென்னங்கீற்றிடை
வழுக்கி ஒழுகியும்
என்னைத்தோய்த்திடுமே
அந்நிலவு.

நிலவாடி
நிலவொழியில் நீராடி,
நீருக்குள் ஒழிந்தாடி,
வாலைப்பருவத்தார்
இழந்தேகம் தொட்டாடி,
தொடுமின்ப உணர்வாடி,
வாயாடி,
வாய்க்குறும்பாடி,
சொல்லடா மௌனிப்பில்
கடைக்கண் எறிந்தாடி,
இதழ்க்கடைச்சிரிப்பாடி,
கண்ணுக்குள் நிலவாடி,
நிலவினில் நம் நிழலாடி,
நீயாடி, நானாடி,

ஆடிய ஆட்டமெலாம்
போயிற்றறுந்த
ஆடிக்காற்று
பட்டமாகி...

ஆனாலும் பார்!
அவைகள் தான் போயிற்று.
போகவே மாட்டாதாம்
'நிலவினில் பேசலாம்' *
எனும்
பாசாங்குத்தனம்.
நால்வர்ண மனம்
துருவக் கோடிக்கும்
காவிவந்த குணம்.

தாயகத்தைப் புறக்கணித்த
என் தேச மாந்தரா
உனை ஏறெடுத்துப்பார்ப்பார்!
மதியாதார் வாசல்
மிதியாதே.
என்னைப்பார்த்தாயா
புறப்பட்டுவிடு.
நில்லாதே
எட்டிப்போ.

பாற்கடலில்
பள்ளிகொண்டு
அமுதம் மொண்டும்,
மலை மேல் ஏறி
மல்லிகைப் பூக்கொய்தும்
ஆடிச்செல்லாமல்
ஓடிப்போ.

குண்டும், குழியுமென
என் தேசம்.
இருளின் ஆழுகை.
தட்டுத் தடுமாறிடும்
தாய்.

கால் தடக்கி
கால் தடம் மாறி
ஆள் மாறாட்டம்.
குறி துலங்க
ஒளி வீச.
உயிருக்கு
பால் சிந்து.
போ!
அங்கிரு.
நான் வர.

கோடைகாலம் 1992
பாரிஸ்

* சாதியப் பிரச்சனையை
உள்ளடக்கமாய்கொண்ட,
என். கே. ரகுநாதன் அவர்களின்
'நிலவினில் பேசலாம்' சிறுகதை
நினைவு கொள்ளப்பட்டுள்ளது.

கி.பி. அரவிந்தன்.

உங்கள் கவனத்திற்கு
இந்த இதழிலிருந்து ஓசை முகவரி
மாற்றப்படுகின்றது !

# நூல் விமர்சனம்

சி. சிவசேகரம்

## உலகமெல்லாம் வியாபாரிகள்

*ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் (19-91) நீலமலர், 5 குச்செரி ஒழுங்கை, சென்னை 600004*

இலக்கியம் சமுதாயத்தின் கண்ணாடி என்று சொல்லும்போது அது சமுதாயத்தில் நடக்கும் விஷயங்களை
அப்படியே காட்டுகிற ஒன்று என நாம் கருதுகிறோமா ? உத்தமமான கண்ணாடி என்று பௌதிக நடைமுறையில்
எதுவும் இல்லை. அகச்சார்பும் முற்சாய்வுகளும் மனத்தடைகளும் பூரணமாகவே அற்ற மானுடரும் இல்லை. எனவே மனிதரது ஆக்கங்கள் ஒருபுறம் காட்சியையும் மறுபுறம் கண்டவரையும் பற்றியவை. அகச்சார்போ முற்சாய்வோ மனத்தடையோ நேர்மையீனத்தின் வெளிப்பாடல்ல. அவை ஒவ்வொன்றும் நமது பார்வையின் குறைபாட்டின் வெவ்வேறு பரிமாணங்கள். மனிதரது குறைபாடான அறிவாற்றலின் உதவியுடனேயே நாம் உண்மையைத் தேடுகிறோம். மனிதரது உண்மை காலமும் சூழலுங் கடந்த நிரந்தரமான ஒரு பொருளல்ல. அது மனித நடைமுறை எனும் உரைகல்லில் மீண்டும் மீண்டும் பரீட்சிக்கப்பட்டு மாற்றமடையும் ஒரு பொருள். மனிதர் சமுதாய வாழ்வுடையோர் என்பதால் மனித உண்மைக்கு ஒரு பாரிய சமுதாயத்தன்மை உண்டு. சமுதாயம் மாறும்போது உண்மை பற்றிய பார்வைகள் மாறுகின்றன சரி -பிழை பற்றிய மதிப்பீடுகள் மாறுகின்றன, நல்லது -கெட்டது என்று வேறுபடுத்தும் விழுமியங்கள் மாறுகின்றன. முரண்பாடுடைய ஒரு சமுதாயத்தில் வாழும் ஒரு இலக்கியவாதியால் சமுதாயப் பிரிவுகட்குச் சார்பின்றியோ சமுதாய மாற்றம் பற்றிய நோக்கின்றியோ இயங்க முடியாது. ஒருவரது சமுதாயப் பார்வையும் சார்புகளும்

அவரது எழுத்தினூடு தம்மைப் புலனாக்குகின்றன. தனக்கு நம்பிக் கையில்லாத ஒன்றை வலிந்து எழுதும் எழுத்து, புற உண்மை யைச் சார்ந்திருந்தாலும் அகத்திற் குப் பொய்யானது. பார்வையின் குறைபாட்டால் உண்மையைக் கிர கிக்கத் தவறினாலும் நம்புகிறதை எழுதுபவரது எழுத்துத் தவறானதே ஒழியப் பொய்மையாகாது.

நமது ஈழத்தமிழ்ச் சமுதாயம் மாறிக் கொண்டு வருகிறது. அந்த மாற்றத் தைக் கிரகிக்கு முன்னமேயே தமது மண்ணிலிருந்தே பிரியும் நிலை பலருக்க ஏற்பட்டு விட்டது. காலத் துடனான மாற்றத்துக்கு முகங் கொடுக்க முடியாது தலைமுறைகட் கிடையிலான முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளத் திணறும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத் துக்குப் புதிய பிரச்சனைகளையும் எதிர் கொள்ள நேரிட்டுள்ளது. தமிழ் ஈழத்தேசியம் பேசிக் கொண்டே யாழ்ப்பாணத்துச் சைவ வேளாள உயர்குடிப்பிறந்த படித்த உத்தியோகம் பார்க்கும் மகனுக்குச் சீதனத்துடன் அழகான பெண்ணுக் குக் கூசாமல் விளம்பரம் செய்யும் இழிநிலை. நமது சாதகம், சாதி, சீதனம், உத்தியோகம் என்று மனித உறவை வியாபாரமாக்கிவிட்ட நமது இழிவைப் புதிய சூழலிலும் தொடர்கிறோம். நமது பெண்ண டிமைச் சிந்தனைகளைக் கற்பு, பெண்மை, கலாச்சாரம் என்பன பற்றிய பம்மாத்துக்களூடு நீடிக்கி றோம். இங்கு முளைத்துள்ள பத்தி ரிகைகளில் கனமான அரசியற், சமுதாய ஆய்வுகளைக் கொண்ட சிறு சஞ்சிகைகளை விட்டால், யாவுமே பெண்ணடிமைத்தனம் பேணுவன. விலக்கான சிறு சஞ் சிகைகளிலும் பெண்ணடிமைத்த னம் பற்றிய ஆழமான சிந்தனை போதாது. பெண்ணுரிமை பேசு வோர் பலரிடையே பிற சமுதாய முரண்பாடுகளுடன் பெண்ணடிமை முறை எவ்வாறு பிணைந்துள்ளது என்ற தெளிவு உள்ளதாகத் தெரி யவில்லை ஒரு இலக்கியவாதியாற் தீர்வுகளை முன்வைக்க முடியுமா, முடியுமாயின் எவ்வாறு என்பன ஒரு வகையான கேள்விகள். நமது மனத்தடைகள் நமது கண்களை மறைக்கின்றபோது ஒரு இலக்கிய வாதியால் நம் பார்வை செல்லத் தவறிய ஒரு திசையில் நம் கண்க ளைத் திருப்ப முடியும். கண்களைத் திறந்து காண்பதும் கண்டதைப் பற் றிச் சிந்திப்பதும் நமது தரத்துக்கும் தகுதிக்கும் ஏற்றபடி நிகழும். ராஜேஸ்வரியின் நாவல் பதினான்கு வருடங்கட்கும் முன்னர் எழுதப்பட் டுச் சென்ற ஆண்டு நூல் வடிவம் பெற்றது. லண்டன் முரசு சஞ்சி கையிற் தொடர்கதையாக வந்த கதையை நாவலாகப் பிரசுரிக்கு முன் அதிலிருந்த பல குறைபாடு களைக் களைந்திருக்கமுடியும். இந்த நீண்ட கால அவகாசம் சரி யாகப் பயன்படுத்தப்படாததன் விளைவாகக் கதையின் அத்தியாயங் கள் தொடர்கதையின் தன்மை யையே காட்டுகின்றன. அதை விட முக்கியமாகச் சொற்பிழைகள், வசனப்பிழைகள், தலைகீழான வாக்கியங்களின் கணிசமான எண் ணிக்கை என்பன வாசகர்களிடம் ஒரு பொறுப்பான எழுத்தாளர் காட்டும் கரிசனையைத் தெரிவிக்க வில்லை. பழமொழிகளும் உரை நடை வழக்கில் வருஞ் சொற்றொ டர்களும் சில இடங்களிற் தவறாக வருகின்றன. இவை திருத்த முடி யாத தவறுகளல்ல ஏன் திருத்தப் படவில்லை என்பதற்கான விளக் கம் ஆசிரியர் தட்டிக் கழிக்கத் தகாதது. சம்பவங்களின் புனைவி லும் பாரிய பிசகுகள் உள்ளன. இவை பற்றி இங்கு விபரிக்க இட மில்லை. கதையின் சாராம்ஸத்தை யும் அது கூற முனையும் கருத்துக் களையும் ஆசிரியர் அதைச் சொல்

வதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளார் என்பதையுங் கவனிப் போம். வழமையான சமுதாய அந் தஸ்துத் தொடர்பான காரணத்துக் காக லண்டன் வாழ் தமிழ்ப் பெற் றார் தம் பெண்ணை அவள் ( சகுந் தலா ) நேசித்த ஒருவனிடமிருந்து பிரித்து அமெரிக்கவாசி ஒருவனுக்கு வற்புறுத்தி மணம் செய்விக்கின்ற னர். அவளது இளைய சகோதரி தனது ஆங்கிலேயக் காதலனை மணக்கத் திட்டமிடுகிறாள் என்ப தால், அதிற் குறுக்கிட, அவள் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப் படுகிறாள், பழைய காதலனைச் சந்திப்பது; தகப்பனுக்கும் பழைய காதலனுக்கும் மோதல், அவனுக் கும் அவளுக்குமிடையே முதலில் மோதல், பிறகு நெருக்கம்; அதை அவசியமாக்கும் வகையில் அவளுக் கும் அவளது கணவனுக்குமிடையிற் சுமூக உறவின்மை; சகோதரிக்குத் தாய் தகப்பன் செய்யும் திருமண ஏற்பாடு; அக்காள் உதவியுடன் தங்கை தப்பியோடும்போது விபத் தினால் மரணம்; அவள் மரித்த ஆஸ்பத்திரியில் மாறி காதலர் ஒருவரை ஒருவர் அணைக்கும் போது திடீரென்று கணவன் அமெ ரிக்காவிலிருந்து வந்து ஆஸ்பத்திரி யில் பிரசன்னம்; அபார சஸ் பென்ஸ் என்கிறீர்களா ? புருஷன் காரனுக்குச் சொத்தில் ஒரு கண். எனவே அதைக் கண்டுங் காணா ததுபோல் நடந்து மாமனாரிடம் பணங் கறக்கத் திட்டமிடுகிறான். மனைவி அவனுடன் அமெரிக்கா போக மறுக்கிறாள் அயல் நாடு சென்ற தனது காதலனுக்குக் காத் திருப்பதாகக் கதை முடிகிறது.

கதையில் ஒரு மசாலா தமிழ் சினி மாக் கதைத் தன்மை இருக்கிற தென்னவோ உண்மை. பல தொடர்கதைகள் பலவீனமான இலக்கியப் படைப்புக்களாக இருப் பதற்கான காரணங்களில் ஒவ் வொரு அத்தியாய முடிவிலும் இனி என்ன நடக்குமோ என்ற ஏக் கத்தை வாசகர் மனதில் ஏற்படுத்த வேண்டிய தேவையும் ஒன்று. இந்த வகையிற் சராசரித் தொடர்கதை ஒரு வியாபாரப் படைப்பாகி விடு கின்றது. ( கதாசிரியர் குறிப்பிடும் "உலகமெல்லாம் வியாபாரிகள் " என்ற வகையிலல்ல ) தொடர்க தையாக எழுதும் நிர்ப்பந்தத்தை மட்டுமே வைத்து என்னாற் சில விஷயங்களை விளக்கவோ நியாயப் படுத்தவோ முடியவில்லை.

பிரதான ஆண் கதாபாத்திரம் ( கார்த்திகேயன் ) இன ஒடுக்கலுக் கும் இனவாத வன்முறைக்கும் ஆளான ஒரு இளைஞன். காதலி யின் தகப்பனாருடைய உயர் நடுத் தர வர்க்கத்தின் பம்மாத்து அரசி யலையும் பசப்பான சமுதாய விழு மியங்களையும் நிராகரிப்பவன். அவனால் ஆயுதமேந்திய விடுத லைப்போராட்டத்தையே ஆதரிக்க முடிகிறது. அதற்காதரவாக அவன் செயற்படுகிறான். அவனது காதல் தோல்வியடைந்தபின் தனது முன் னாட் காதலியைக் காணும்போது இளக்காரமான சுடுசொற்களால் ஒவ்வொரு தடவையும் அவளைத் தாக்குவது இந்த " விடுதலை பெற்ற " இளைஞனது தனிமனித உறவுகளில் அவனது சுயத்தின் முக் கியத்துவம் மற்ற மனிதர்களது மன நிலையையும் இடர்ப்பாடுகளையும் கணிப்பில் எடுக்கத் தவறுவதைக் காட்டுகிறதா ?

ஆங்கிலேயன் ஒருவனை மணந்த ஒரு தமிழ்ப் பெண் அவனை விவாகரத்துச் செய்கிறாள் என்ப தைக் கதையிற் குறிப்பிடும் ஆசிரி யர் சகுந்தலாவின் சகோதரி ஒரு ஆங்கிலேயனை மணமுடிப்பதற் கான திட்டத்தில் அவளது மரணத் தின்மூலம் மண் விழுத்துவது ஏன்

சகுந்தலா கணவனைப் பிரிய எடுத்த முடிவும் பழைய காதலனை எதிர்பார்த்திருப்பதாகக் கதை முடிவதும் ஓரளவு துணிகரமானது என்ற காரணத்தால் ஆசிரியர் மற்றுமொரு காரியத்தைத் தவிர்த்தாரா தெரியவில்லை.

எதிர்பாராத திருப்பங்களும் கிளர்ச்சியூட்டும் சம்பவங்களும் ஒரு நல்ல கதை இலக்கியத்தின் அத்தியாவசியமான கூறுகள் அல்ல. வெகு சாதாரணமாகவே தோன்றும் விஷயங்களிற்கூட ஒரு நல்ல இலக்கியவாதியால் அழகான அற்புதமான அம்சங்களைக் காணவும் காட்டவும் முடியும். தமிழ் வாசகர்கள் நுண்ணிய உணர்வு மிக்க எழுத்துக்குப் பரிச்சயப்படாததாலேயே நமது இலக்கியங்களில் மர்மக் கதைப் பண்பு சற்று அதிகமாக வேஉள்ளது.

இந்த நாவலின் முக்கியமான பங்களிப்பு நமது லண்டன் வாழ் தமிழ் நடுத்தர வர்க்கச் சமுதாயத்தின் சமுதாய விழுமியங்களைத் தோலுரித்துக் காட்டுவதுதான். இச் சமுதாய விழுமியங்கள் சாதி ஒடுக்கல், வர்க்கச்சுரண்டல், பெண்ணடிமை என்பனவற்றைச் சார்ந்து நிற்பன. சொந்த மண்ணில் ஏற்படும் மாற்றங்களைச் சீரணித்து கொள்ள மாட்டாது அந்த மண்ணிற்கூடப் பேண முடியாத பழமையின் இழிவான அம்சங்களையும், போலித்தனங்களையும், பம்மாத்துக்களையும் லண்டன் தமிழ் நடுத்தரவர்க்கம் பேணுகிறது. பதினான்கு வருடங்கட்குப் பின்னும் கதையில் வரும் சம்பவங்கள் இன்றும் நடக்கக் கூடியனவாகத் தோன்றுவது, நமது சமுதாயத்தின் அரசியல், சமுதாய உணர்வுகளின் தேக்க நிலையையே காட்டுகிறது.

கதாசிரியரது அரசியல் உணர்வின் ஆழமின்மை, கதையிற் பல இடங்களிற் தன்னை அடையாளங்காட்டிக் கொள்கிறது. ஆயினும் இடையிடையே தோன்றும் பிரசார வாடையை மீறி ஒரு நேர்மையான ஒரு அவதானியின் தரிசனங்கள் நூல் முழுவதும் வியாபித்துள்ளன. கதையமைப்பிலும் சொல் -வாக்கிய அமைப்புக்களிலும் கூடிய கவனம் காட்டப்பட்டிருப்பின் இந் நாவல் ஐரோப்பியத் தமிழ் எழுத்தின் ஒரு பிரதான ஆக்கமாக வழி ஏற்பட்டிருக்கும்.

o

## ஜேர்மனி இலக்கியச்சந்திப்பு

*இச்சந்திப்புக்கு வயசு நான்கு நடக்கிறது.*

*ஜேர்மனியில் சஞ்சிகைகள் பல்கிப் பெருகிக்கொண்டிருந்த காலம் ஆரம்பகாலம்.*

*'சஞ்சிகைகள் மத்தியில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இருக்கட்டுமேன்! எமக்கு மத்தியில் ஒரு ஐக்கியத்தை, பரஸ்பர புரிந்துணர்வை ஏற்பத்திக்கொள்வது ஆரோக்கியமானதுதானே!' என்ற நன்நோக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் இந்த இலக்கியச்சந்திப்பு.*

மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை ஒவ்வொரு குழுவினர் பொறுப்பேற்க ஜேர்மனியின் பல்வேறு பாகங்களிலும் இச்சந்திப்பு நடைபெற்று வருகின்றது. அண்மையில் 22-08-92 லும் இச்சந்திப்புத் தொடரின் 13வது தொடர் ஜேர்மன், பொன் நகரில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் 'ஓசை' சார்பிலும் சந்தித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு நாள் நிகழ்வு.

காலை பத்து மணிமுதல் இரவு ஏழு மணிவரை.

ஆய்வுகள், விவாதங்கள், கேள்வி பதிலென அனைத்தும் பயன்தரும் அறிவியல் அம்சங்கள். சஞ்சிகையாளர்-வாசகர்கள் கேள்வி பதில் நிகழ்ச்சி, எடுத்த கருப்பொருளைவிட்டு எங்கெங்கோவெல்லாம் இழுபட்டுத்திரிந்ததால், கொஞ்சம் எரிச்சலாக இருந்தது.
இதைவிட சிறுகதைப்பட்டறையென ஐரோப்பிய தமிழ் பரப்புக்கு ஒரு புதுமைநிகழ்வு. படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் படைப்புத்துறை பற்றிய ஆய்வுகள்.

மொத்தத்தில் பயனுள்ளபொழுது.

இருந்தும் நிகழ்வில் ஐம்பது வரையிலான தொகையினரே கலந்து கொண்டமை கவலையான விடயம்.

ஜேர்மனியில் தொடர்ந்தும் பல சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு சில சஞ்சிகையாளர் -ஆதரவாளர்கள் மட்டுமே இந்நிகழ்வில் கலந்துகொண்டமை 'சந்திப்பின்' சோர்வுப்போக்கையே காட்டுகின்றது.

ஒரு வகையில் பார்த்தால், ஈழப்போராட்ட தீவிர அரசியல் முன்னெடுப்பையே இச்சந்திப்பு நோக்காகக்கொண்டு செயற்படுகின்றதெனவும், இதன்காரணமாக சில சஞ்சிகைகள் தாமாகவே ஒதுங்கிக்கொள்கின்றன என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஆனால், அரசியல், தீவிரம் அப்படியென்று பார்த்தால் இச்சந்திப்புத் தொடரானது நான்கு வருடங்களாகச் சாதித்ததுதான் என்ன? குறைந்தபட்சம் பொதுவான வேலைத்திட்டங்கள் எதையாவது தன்னகத்தே கொண்டுள்ளதா? போன்ற இயல்பான கேள்விகள் தாமாகவே எழுகின்றன. சரியான பதில் இல்லை.

எப்படியாயினும் ஐரோப்பியச் சூழலில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இச்சந்திப்புத்தொடரை தொடர்ந்து நடாத்திவருபவர்கள் நன்றியுணர்வுடன் பாராட்டப்படவேண்டியவர்களே. அதே வேளை இவர்கள் ஒவ்வொருவரதும் கடுமையான உழைப்பு மேலும் பயன்தரக்கூடிய வகையில், காரணங்களை ஆய்ந்தறிந்து 'வட்டம்' அகலிக்கப்படுதலும், எதிர்கால வேலைத்திட்டமொன்றை முன்வைதது செயற்பாடுகளை நகர்த்தலும் அவசியம்.

- புவனன்

# வேலிக்குள்ளே வாழ்கிறோம்.

அ. குமரன்.

வீடும் வேலியும் என முடங்கிக் கிடந்த நிலையிலிருந்து வெளியே வந்து உலகப்பந்தின் பலதிசைக ளிலும் வீசியெறியப்பட்டபின்னும் இன்னும் வேலிக்குள்ளேயே வாழ்ந் துகொண்டிருக்கும் எம்மவரின் மனோபாவத்தினது ஒருபோக்கை சென்ற இதழில் தொட்டிருந்தேன். இன்னும் சற்று இந்த இதழில் சிந் திக்கிறேன்.

அகண்ட பிரபஞ்சத்தின் கோடு களும் கோலங்களும் இப்போது நம்வாழ்வில் பிணைந்துவிட்டன. வேறுபட்ட வாழ்வியல் சூழலும் கலாச்சாரப் போக்குகளும் நமக்குப் பரிச்சியப்பட்ட அம்சங்களாகிவிட் டன. மானுடத்தின் பல்வேறு வார்ப்புப் படிவங்களை அன்றாடம் வீதியில், வேலையில் வேறுஇடங் களில் சந்திப்பவர்களாகி விட் டோம். சரி இந்தப்புதிய அம்சம் பற்றி நம்மில் எத்தனைபேர் தெரிந்து கொண்டோம்? வாழும் நாடுபற்றி அதன் வரலாறுபற்றி, மக்கள்பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வப்பட்டவர்கள் எத்தனைபேர்? நம்மை அறிமுகப்படுத்திக் கொள் ளும்போது நம்நாடு பற்றி ஏதும் அறியாதவர்களாக இருந்தாலும் பழகப்பழக தாங்களாகவே அறிந் துகொண்டு அதை நம்மிடம் கேட்டு விளக்கம்பெற முயல்கின்ற இந்த வெளிநாட்டவர்களின் போக்கு ஏன் நமக்கு இல்லை?
இப்படி நான் எழுதிய உடனே அப்படி எங்கிருக்கிறான் ஒரு வெளிநாட்டவன் எப்போது நம்மை அடித்துத்துரத்தலாம் என்று காத்திருப்பவர்களைத்தானே காணமுடிகிறது என்று பொரிந்து கொட்டாதீர்கள். கொஞ்சம் சிந்தித் தால் இந்த மாதிரி இவர்கள் ஆக நாம் காரணமாக இருந்திருக்கி றோம் என்ற உண்மை சுடும். அர சியல் பொருளாதாரம், வேலையில் லாத்திண்டாட்டம் என்ற அடிப்ப டைப் பிரைச்சனைகள் நம்மை அவர்கள் கண்களுக்கு எதிரிகளா ககக்காட்டுகின்றன என்ற கனமான காரணத்தை என் கட்டுரைத் தலைப்புக்கு பொருந்தாத நிலை யால் ஒருபுறம் வைத்துவிட்டு நாமும் நமது போக்கும் என்று சிந் தித்துப் பாருங்கள்.

வேலிக்குள் வாழ்கின்ற மனோ பாவமும் வீண்வேலை நமக்கேன் என ஒதுங்கிப்போதலும் நம்மை அவர்களுக்கு அந்நியர்களாகக் காட்

டியிருக்கின்றன. தவிர வந்தநாட்டில் வாழ்பவர்களாக இல்லாமல் சொந்த நாட்டில் இருப்பவர்களைப் போல நமது சகல போக்குகளையும் ஒருவகையான அடாவடித்தனத்தோடு நாம் அமுல்ப்படுத்தினால் எப்படி நம்மீது மதிப்புவரும்? வீட்டுச்சண்டை, வேலிச்சண்டை, கோஸ்டிச்சண்டை, ஏமாற்று, பித்தலாட்டம் எல்லாவற்றையும் சர்வசாதாரணமாகவும் தாராளமாகவும் வெளிப்படுத்தினால் இவைகளின் வாரிசுகளாகத்தானே நம்மையவர்கள் பார்ப்பார்கள் ? நிலைமையைச் சற்று மாற்றி இவர்கள் நம் நாட்டில் புகலிடவாசிகளாக வாழ்கிறார்கள் . இப்படியான பழக்கங்களோடு என எண்ணிப்பாருங்கள். என்ன நடந்திருக்கும். ஆகா என்நாட்டில் வந்து தனது போக்கைக்காட்டி, என்ன திமிர் இவனுக்கு, என்று வரிந்து கட்டி அடித்துத்துரத்தி இருக்கமாட்டோமா? அதைத் தானே இப்போது அவன் செய்கிறான்.

ஆக நாம் நலமாக இருந்தால் இங்கிருக்கும் அடக்குமுறைகளையும் அரசியலையும் மீறி மக்களை நேசிக்கப்பழகியிருந்தால் மதிப்பும் அன்பும் கிடைத்திருக்குமல்லவா? இயல்பாகவே அறிவதில் உள்ளஆர்வம் வசதியும் கிடைக்கின்றபோது அதிகரித்தல்லவா இருக்கவேண்டும். ஏன் அப்படியில்லை? இன்னமும் நானும் எனது பிரச்சினைகளும் என்ற வட்டத்துள் வீடு, வேலை, சாப்பாடு, படம் , தூக்கம் மறுபடிவேலை, வீடுஎன்று ஒரே பாணியில் பழக்கமாகி தொடர்ந்து வழக்கமாக அதுவே வாழ்க்கையாகி விட்டது நமக்கு.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்க்கை இயந்திரமயமானதுதான். இரத்தத்தைக் கசக்கிப்பிழிகிற பச்சை முதலாளித்துவத்திற்கு உழைப்பை விற்றுத்தான் உயிர்வாழ முடியும். சரிதான். ஆனால் இந்த இயந்திரத்தனத்தையும் கடந்து நம்முள் இருக்கின்ற மனிதம் கொஞ்சமாவது துடிப்போடு வெளிப்படவேண்டுமே. புதிய உலகம், புதியகோணம், புதியகலாச்சாரம் என்ற அம்சங்களில் புதிய மனிதர்களைப் பார்த்து புதுமையறிந்து நேசிக்கவேண்டுமே.

வேலைக்குமட்டும் இந்த மொழி வேண்டும் என்று பார்க்காமல் ஒரு புதிய மொழி பற்றிய ஆர்வத்தோடு இந்நாட்டு மொழிகளை அறிந்து கொண்டவர்கள் எத்தனைபேர்? இவனோடு தொடர்பு கொண்டால் என்ன இலாபம் கிடைக்குமென்று கணக்குப்பார்த்து நம்மையும் நம் கலாச்சாரத்தையும் அறிமுகப்படுத்தாமல் ஒரு புதிய மனிதனுக்கு என் பெருமையான கலாச்சாரத்தை சொல்லிவைக்கிறேன் என்ற நோக்கத்தோடு சொல்லி அதையே பரஸ்பரம் என்ற வகையில் அவனைப்பற்றியும் அறிந்துகொள்ள முயன்றவர்கள் நம்மில் எத்தனைபேர்?

சிந்தித்துப்பார்த்தால், நமக்குக்கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பை நாம் பயன்படுத்தாதது மட்டமல்ல இழந்துவிடவும் போகிறோமா என்ற அச்சமே எழுகிறது. சொத்தைப்பிரித்து சுயநலத்தோடு சுருக்கி வட்டமடித்துவிட்ட வேலிகளைப்பிரித்துக்கொண்டு வெளியே வந்தாக வேண்டும். புதியனவும் புடம் போடவேண்டியனவுமான நல்லவைகள் பல நம் கைக்கு அருகில் இருக்கின்றன. எட்ட நமக்கு மனம் வேண்டும். எண்ணிப்பார்க்க விசாலம் வேண்டும். கூண்டுக்குள் இருந்து வெளியே வந்தாயிற்று. இறகுகள் இனி விரிக்கப்படவேண்டும். எல்லைகள் சர்வ தேசியமாக இதயம் மனிதமாய் இயல்பாகவேண்டும்.

(இன்னும் சிந்திக்கிறேன்)

# திருவிழா

சின்ன வயதில் சிறு குடில் கட்டி
அம்மன் கணபதி அழகிய முருகன்
படங்களை ஒட்டி பகட்டாய் பூக்களால்
மாலைகள் செய்து தோரணம் கட்டி
பாக்கு வெற்றிலை பால்பழம் தேங்காய்
கும்பம் வைத்து குத்துவிளக் கேற்றி
சாம்பிராணி கற்பூர புகைகளில்
பழைய வாளிகள் சட்டிகள் மாறி
ஐந்து கூட்டம் மேளமாய் முழங்க
மினுங்கும் பேப்பரில் சப்பரம் செய்து
வீதி எங்கும் ஊர்வலம் சென்றோம்.

இன்றைய சிறுவர் என்ன செய்வர்
அந்திம காலத்தில் படும் அவதியை
ஆரம்ப முதலே அனுபவிக்கவோ?


இறைவா நீ இருப்பதனால்
சின்ன வயதில் நாம் செய்த பூசைப்
பலனாய் எமக்கு ஓர் வரம் தா

துப்பாக்கி வெடிகள் குண்டுகள் ஷெல்கள்
மேளச் சமாக்களாய் விழட்டும் செவிகளில்
சன்னங்கள் சிதறல்கள் பூக்களாய்த் தெரியட்டும்
புல்லற் செயின்கள் பூமாலையாய் உணரட்டும்
கவச வாகனங்கள் மின்னட்டும் சப்பரமாய்
சிறுவர்கள் இவற்றுடன் சிந்தை மகிழ்ந்து
விளையாடட்டும் ஓடிப்பிடித்து.

- அ. சந்திரகாசன்.

**தாயகம் கவிதைகள்**
**அறுபத்தியாறு**

# என்னவென்று அழைப்போம் !



இனிய நுங்கை
சத்தான பழத்தை
சுவையுள பதநீரை
கள்ளையும் தந்தாய் !
வீட்டுக்கு வளையும்
கூரைக்கு ஓலையும்
மாட்டுக்குத் தீனியும்
துலாவுக்கு மரமும்
எல்லாமே ஈந்தாய் !

உன் -
மெல்லிய குருத்தால்
பெட்டிகடகம், படுக்கப்பாயும்
பாவனைக் கிழைத்தோம் !

காலங் காலமாக
உனது கொடையால்
"கற்பகதரு" என
போற்றப்பட்டாய் !

அருமைப் பனையே !
இன்று நீ -
புனித பூமியின்
உரிமைப் போரில்,
தாயகம் மீட்கும்
தர்ம யுத்தத்தில்,
தரும் பெரும் பங்கை
என்னவென்றுரைப்போம் !

எமக்கு நீ
மறைப்பைத் தருகிறாய் !
கொல்ல வரும் 'றவுண்சை'
நீயே ஏற்று
எம்மைக்காக்கிறாய் !
வட்டமிடும் 'ஹெலியை' க்கண்டதும்
நாங்கள்,
உன்னைச்சுற்றிசுற்றி மறைகின்றோம் !
உன் வைரமேனியால்
குண்டுகளைத் தடுக்கிறாய் !
'ஷெல்' துண்டை ஏற்கிறாய் !
எம் வீட்டையும் காக்கிறாய் !
சில வேளைகளில்,
உன் உயிரையும் கூட
தியாகம் செய்கிறாய்
எமக்காக.

உயிரே !
எங்கள் கற்பகதருவே !
உனை இனி,
என்னவென்று அழைப்போம் !

தாத்தா
அளவெட்டி

